உ

# ஞானப் பழம்



அகளங்கன்

# ஞானப் பழம்

உ

# ஞானப் பழம்

## (பா நாடகம்)

## அகளங்கன்

வெளியீடு :

**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் - 37**

# ஞானப் பழம்


பெயர் :- **ஞானப் பழம்**

வகை :- பா நாடகம்

எழுதியவர் :- **அகளங்கன் (நா.தர்மராஜா)**

முகவரி :- 90, திருநாவற்குளம், வவுனியா

பதிப்புரிமை :- திருமதி பூரணேஸ்வரி தர்மராஜா B.A (Hons)

வெளியீடு :- வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

முதற்பதிப்பு :- 24.04.2017

அச்சுப்பதிப்பு :- வாணி கணினிப் பதிப்பகம்.
இல 85, கந்தசுவாமி கோவில்வீதி,
வவுனியா 024- 2223658

விலை :- ரூபா 200/=


---

# GNANAP PAZHAM


Name :- **Gnanap Pazham**

Type :- Poetic Play

Author :- **Agalangan (N.Tharmarajah)**

Address :- 90, Thirunavatkulam Vavuniya.

Copyrights :- Mrs. Pooraneswary Tharmarajah B.A(Hons)

Publication :- Circle of Arts And Literary Friends,
Vavuniya.

1st Edition :- 24.04.2017

Printer :- Vaani Computer Printing Center.
No 85, Kanthasamy Kovil Road,
Vavuniya. 024 2223658

Price :- Rs 200/=

Email :- akalankan04@gmail.com

ISBN :- 978-955-7654-13-3



கம்பமுகில் பொழிந்ததமிழ்க் கடலை உண்டு
கருத்துமழை பொழிகின்ற கனத்த கொண்டல்
நம்பஅருந் திறத்தோடு உலகம் எங்கும்
நம்மேன்மை பரப்பிவரும் நலத்த வெய்யோன்
உம்பர்உல கெனமேடை அமைத்துச் சான்றோர்க்கு
உயரியநல் மதிப்பளித்து உயர்த்தும் செம்மல்
செம்புனலில் தமிழுணர்வு பெருகச் செய்யும்
சிறப்புமிகு கம்பவா ரிதி‘இ’ன ஜெயராஜ்இற்கு

இந்நூல்

# காணிக்கை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ♦ | வெளியீட்டுரை | 07 |
| ♦ | தமிழ்வாழ்த்து | 08 |
| ♦ | அணிந்துரை - திரு.முருகேசு கௌரிகாந்தன் | 09 |
| ♦ | மூதறிஞ உன் அகவை - கம்பவாரிதி இ.ஜெயராஜ் | 15 |
| ♦ | முன்னுரை | 17 |
| 1. | ஞானப் பழம் | 19 |
| 2. | ஞானக் குழந்தை | 29 |
| 3. | நாமார்க்குங் குடியல்லோம் | 56 |
| 4. | நம்பி ஆரூரர் | 67 |
| 5. | பிட்டுக்கு மண்சுமந்த பெருமான். | 84 |

# வெளியீட்டுரை

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கில மொழி கற்பித்தல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்)
செயலாளர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

ஒரு நாட்டின் விலாசமாக, முகமாக இருப்பவர்கள் கலை இலக்கிய வாதிகளே. அதிகாரம் படைத்த அரச தலைமைகள், பணம் படைத்த சொத்துடைமையாளர்கள் எல்லோரும் காலவெள்ளத்தில் மறக்கடிக்கப்பட்டுவிட எழுத்தாளர்கள், மற்றும் படைப்பாளிகளின் பெயர்கள் காலம் உள்ளவரை வாழும்.

அந்த வகையில் கலை இலக்கியங்கள் ஊடாக சமூக இருப்பைப் பதிவு செய்யும் கலை இலக்கியவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கவே கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த கருத்தரங்குகளும் மற்றும் நூல் வெளியீடுகளும்.

எங்கள் வட்டத்தின் தலைவராக மிளிரும் **கலாநிதி அகளங்கன்** 44 நூல்களை எழுதி வன்னி மண்ணின் மூத்த பெரும் படைப்பாளியாக திகழ்கிறார். அவரது **45வது நூலான ஞானப்பழம் (பா நாடகம்)** நூலை **37வது வெளியீடாக** வெளியிடுவதில் வட்டம் பெருமை கொள்கிறது.

ஏற்கனவே கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், கட்டுரை, மரபு இலக்கிய விமர்சனம், ஆய்வு, இசைப்பாடல்கள், சிறுவர்பாடல்கள் முதலான துறைகளில் எழுதி வாசகர்களின் பாராட்டுக்களையும் விருதுகளையும் வென்ற **தமிழ்மணி அகளங்கன்** மேலும் பல நூல்கள் எழுதி 100வது இலக்கை எட்ட வேண்டும் என வாழ்த்தி இலக்கியப் பணி தொடர எமது ஆதரவை இத்தால் வழங்குகின்றோம்.

**க.ஸ்ரீகணேசன்**
செயலாளர், வ.க.இ.ந.வட்டம்

# தமிழ் வாழ்த்து

இசைத்திட முடியாது எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.
(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும். (இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும் (இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர். (இசைத்....)

**அகளங்கன்**

# அணிந்துரை

**முருகேசு கௌரிகாந்தன்** M.A M.Ed.
(முதுநிலை விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி)

கலாநிதி தமிழ் மணி அகளங்கன் அவர்களது "ஞானப்பழம்' எனும் தலைப்பிலான பா நாடகத்தைப் படித்து முடித்த பின்னர் எமது உள்ளத்திலே பல தெறிப்புக்கள் ஏற்பட்டன. அவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் நண்பர் அகளங்கனது நூலின் பயனாளிகளாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வது பயனுள்ளது.

2014 இல் வெளிவந்த அகளங்கன் மணிவிழா மலரின்படி அதுவரை நாற்பத்து மூன்று நூல்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவை தமிழியல், சமயவியல் என்ற இரு துறைசார்ந்து எழுதப்பட்டுள்ளன. இவற்றில் 39 நூல்கள் தமிழியல் சார்ந்தவை. இவற்றின் உள்ளடக்கங்கள் முத்தமிழ் வளர்ச்சிக்கு இவராற்றிய அரிய பங்களிப்பை நன்கு எடுத்துக் காட்டுவன. அறிவும் உணர்வும் கலந்ததுதான் 'முத்தமிழ்' என்ற உண்மை இவர் தமிழைப் படித்துப் பார்த்தால் புரியும்.

மேற்குறிப்பிட்ட இரண்டு அம்சங்களும் இவரது நாடக நூல் களிலும் கலந்துவரும். இலக்கிய நாடகங்கள், சமூக நாடகங்கள், வானொலி நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், பாநாடகங்கள் என்ற வகையில் அகளங்கன் அவர்களது நாடக நூல்கள் காணப்படுகின்றன. தற்போது வெளிவந்திருக்கும் இந்தப் பாநாடகங்கள் இவரின் எழுத்துப் பணிகளைச் சமயத்தின் பால் திருப்பி விடுவதற்கான நல்லதொரு குறிகாட்டியாகத் தென்படுகின்றது.

தமிழகத்தினதும் இலங்கையினதும் சைவசமய வளர்ச்சியில் புராணங்களின் பங்களிப்பு கணிசமானது. ஆறுமுகநாவலர் அவர்கள் (1822-1879) பெரியபுராணம், கந்தபுராணம் திருவிளையாடற் புராணம் போன்றனவற்றை வசன நடையில் எழுதுவதற்கான காரணமும் இதுவே. அகளங்கன் அவர்களும் தமது

பாநாடகங்களுக்கான விடயப்பொருளை புராணங்களிலிருந்தே எடுத்துள்ளமை நோக்கப்படவேண்டியது. புராணங்களுக்கும் வரலாற்றுக்கும் நெருக்கமான உறவுண்டு. புராண வரலாறு என்ற தொடரைப் பலர் கையாண்டு வருகின்றனர். இரண்டிலும் 'கதை' என்ற உயிர்ப்பான அம்சம் இருக்கும். ஆங்கிலத்தில் உள்ள History இல் 'Story' இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. "புராண வரலாறுகள் பொதுவாக நைமிசாரணிய வனத்தில் சனகாதி முனிவர்கள் வினாவ சூத முனிவர் மேல் வருமாறு கூறத்தொடங்கினார் என்ற ரீதியிலே கதையைக் கூறத்தொடங்கும்"[1] என்பர். பாத்திர உரையாடல் நாடகத்தின் பிரதான இயல்பாகும். சிலப்பதிகாரத்தை 'முத்தமிழ்க்காப்பியம்' என்பவர்கள் அதில் வரும் வழக்குரைகாதையினை நாடக இலக்கியமாகக் கொள்வது இதனாலேதான்.

திரைப்படமும் ஓர் ஆற்றல் மிக்க நவீன நாடக இலக்கிய ஊடகமாகும். ஔவையார், பட்டினத்தார், அருணகிரிநாதர், திருவிளையாடல், பூம்புகார், திருவருட்செல்வர், திருமால் பெருமை முதலான பல திரைப் படங்கள் தான் முறைசாராக் கலைத்திட்ட வடிவத்தில் வந்து பல இலட்சக்கணக்கானோர்க்கு இலக்கிய அறிவையும் பக்தியுணர்ச்சியையும் ஊட்டியவை என்பதை நாம் மறந்து விடலாகாது.

முருகப்பெருமான் கனிக்காக மனம் நொந்து பழநிக்குச் சென்று "ஞானப்பழம்" ஆக நின்ற கதையும் திருவிளையாடல் (1965) திரைப்படத்திலிருந்துதான் நாம் படித்தது. இக்கதை எந்தப் புராணத்தில் முதன் முதல் கூறப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அச்சுவேலி ச.குமார சுவாமிக் குருக்கள் (1886-1971) எழுதிய சைவப்பிரகாசிகை நான்காம் புத்தகத்திலும் (1953) இக்கதை (பக் 39-41) கூறப்பட்டிருக்கிறது. குருக்களும் இக்கதை எதிலிருந்து எடுக்கப்பெற்றது என்பதைக் கூறவில்லை. 'இச்சம்பவத்தை பாலசுப்பிரமணியக்கவிராயர் தாம் இயற்றிய பழநித் தலபுராணத்தில் அழகொழுகப்பாடுகின்றார்'[2] என்று செ.தனபாலசிங்கன் (1924 - 1976) கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குமாரசுவாமிக்குருக்கள், தனபாலசிங்கன் ஆகியோரது நூல்களை வைத்துப் பார்க்கும்போது அகளங்கன் அவர்கள் மூலக்கதையினைப் பெரிதும் தழுவியே **ஞானப்பழம் பா நாடகத்தை** (பக் 19-28) எழுதியமை தெரிகின்றது. இக்கதையிலே,

**"அண்ணனின் கையில் மாங்கனி!**
**அண்ணன் உலகை எப்போது சுற்றினார்?**
**அண்ணன் எப்படி எனக்குமுன் சுற்றினார்.**
**அம்மா! இது என்ன அதிசயம் அம்மா"**

என்று முருகன் கேட்பதும் அதற்கு உமை அளித்த பதிலும் தொடரும் உரையாடல்களும் உள்ளத்தை உருக்கும் சந்தர்ப்பங்களாகும்.

விநாயகர் : **முருகா நீ ஓர் கனிபெற நானே**
**"முழுதாய் உதவுவேன் அதுவரை காத்திரு"**

எனும் விநாயகனின் சமாதானம் அகளங்கனின் சிந்தனை முத்துக்களில் ஒன்று. இரண்டு காட்சிகளைக் கொண்ட இந்தப் பா நாடகத்தை முதலில் வைத்தமை தமது பா நாடகத்தின் காப்புத்தன்மை கருதியதாகவும் இருக்கலாம். 'கடுகு சிறிதானாலும் அதன் காரம் பெரிது'.

வைஷ்ணவ சமயத்தில் தான் 'அவதாரம்' பற்றிய கருத்துண்டு. சைவ சமயத்தில் இறைவனின் திருவிளையாடல்கள் தான் உண்டு. ஆயினும் சைவநாயன்மார்களில் முதலாவதாகக் கூறப்படும் ஞானசம்பந்தப் பெருமானை 'அபரசுப்பிரமணியர்' என்று கூறும் வழக்கமுண்டு 'வழுதி கூன் நிமிர்த்த பெருமாளே' என்று தான் அருணகிரியாரும் பாடுகின்றார்.

'ஞானப்பழம்' பாநாடகத்தில் இரண்டாவதாக **'ஞானக்குழந்தை'** இடம் பெற்றிருப்பது வைப்பு முறையின் ஒற்றுமை கருதியென்றே தெரிகிறது. இதிலுள்ள பா நாடகங்களில் பெரியது 'ஞானக்குழந்தை (பக் 29-55) தான். ஏனையவை நான்கு எனும் எண்ணிக்கைக்கு உட்பட காட்சிகளைக் கொண்டிருக்க

ஞானக்குழந்தை மட்டும் பன்னிரண்டு காட்சிகளைக் கொண்டு காணப்படுகின்றது.

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வரலாறே அதிக பாடல்களைக் கொண்டது. அதனால் "பிள்ளை பாதி புராணம் பாதி" என்று சொல்லும் வழக்கம் உண்டு. இங்கும் ஞானக்குழந்தைக்கே அதிக இடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட'ப் பாடப்பெற்ற **பெரிய புராணத்தில்** வரும் **'திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராணம்'**, பரஞ்சோதி முனிவரது **திருவிளையாடற் புராணத்தில்** உள்ள **'பாண்டியன் சுரந்தீர்த்த படலம்'**(62), **'சமணரைக் கழுவேற்றியபடலம்'**(63) என்பனவற்றிலிருந்து கதைக் கூறுகள் பெறப்பட்டிருக்கின்றன.

சைவ நாயன்மார்களைச் சிவபெருமான் ஆட்கொண்ட விதம்பற்றிக் கூறவந்த வாரியார் சுவாமிகள், 'பாலைக் கொடுத்தார்', "சூலை கொடுத்தார்", "ஓலை கொடுத்தார்", "காலைக் கொடுத்தார்" என்று அழகாகச் சொன்னார். சூலை நோய் நீங்கப் பெற்றுச் சைவத்துக்கு மீண்ட நாவுக்கரசரின், 'அதிகார வர்க்கத்துக்கு அடிபணியாத புரட்சிக் குரலையே 'அகளங்கன் **"நாமார்க்கும் குடியல்லோம்"** (பக் 56-66) நாடகமாகத் தந்துள்ளார். தமிழ்ச்சைவர்களுக்கு 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று அபயமளிக்கும் இந்த அருமருந்தன்ன நாடகம் **பெரியபுராண திருநாவுக்கரசு நாயனார் புராணக்கதையைத்** தழுவி எழுதப்பெற்றது.

நான்காவது நாடகம் 'நம்பி ஆரூரர்'(பக் 67-83) **பெரிய புராணத்துத் தடுத்தாட்கொண்ட புராணக்கதை** தழுவியது. பக்தி மார்க்கத்திலே நம்பிஆரூரராகிய சுந்தரர் நின்றநெறி சகமார்க்கமெனும் தோழமை நெறி. 'சமயத்தின் ஆண்டவன் என்ற ஆதி மூலத்திற்கே காரணம் அச்சம்தான்' என்றார் அறிஞர் அண்ணாத்துரை. "அச்சம் தவிர்" "ஆண்மை தவறேல்" என்றார் பாரதியார். பயத்தைப்போக்கிச் சிவனை அணுக வைக்கின்றது அகளங்கனின் இந்த நாடகம். **'நம்பி ஆரூரர்'** என்று

தலைப்பிட்டதிலும் நுணுக்கமிருக்க வேண்டும். நம்பி ஆரூரர் எனும் இரண்டு சொற்களையும் யகர உடம்படுமெய் தோன்றச் சேர்த்து எழுதினால் ஒரு வேளை நடிகர் ஒருவரையும் நினைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காக இவ்வாறு தனித்தனியாக எழுதியிருக்கலாம் என்று தோன்றுகின்றது. அதற்கு மேலாக திருவாரூரையும் நினைக்கச் செய்யும் உத்தியுமாக இருக்கலாம். இவ்வாறான தலையங்கச் சிறப்பைக் கொண்ட இப்பா நாடகத்தை யாம் பல ஆண்டுகளுக்கு முன்பு பாராட்டியிருந்தமையும் மறப்பதற்கில்லை.

நிறைவாக உள்ள **'பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்'** நாடகக்கதை (பக் 84-92) **கடவுள் மாமுனிவரது திருவாதவூரடிகள் புராணத்தின் 'பிட்டுக்கு மண்சுமந்த சருக்கத்தில்** இருந்தும் **திருவிளையாடற் புராணத்தின் மண்சுமந்த படலத்தில்** இருந்தும் பெறப்பட்டிருக்கிறது. வைணவ சமயத்தில் உள்ளது போன்று சைவசமயத்தில் சிவன் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. உண்மை அடியவர்கள் துன்பப்படும் வேளைகளில் அவர்களை உய்விக்கும் பொருட்டும் இலட்சியங்களை உணர்த்தும் பொருட்டும் பெரிதும் திருவிளையாடல்கள் புரிவது அவன் செயல் என்று விளக்கப்படுகின்றது. இந்தப்பாடத்தையே மேற்படி பா நாடகம் மனதில் இலகுவில் பதியும் வண்ணம் புகட்டுகின்றது.

தமிழில் நாடகத்தைப் **பார்க்கும் நாடகம்** எனவும் **படிக்கும் நாடகம்** எனவும் **படிப்பதற்கும் பார்ப்பதற்குமான நாடகம்** எனவும் பாகுபாடு செய்வதுண்டு. வடமொழியிலும் **'திருசிய காவியம்' சிராவிய காவியம்'** என்று இவற்றைப்பாகுபாடு செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்திலும் இப்படிப்பட்ட பாகுபாடுண்டு. பாடல் வடிவிலான நாடகத்தை அவர்கள் 'Poetic Play' என்கின்றனர்.

கலாநிதி அகளங்கன் அவர்களது இந்த ஐந்து நாடகங்களையும் பாடசாலை மாணவர்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றாக பாடசாலைகளில் இலக்கியமன்றத்திலோ, சமய மன்றத்திலோ நடித்தும் ஓய்வான நேரங்களிற் படித்தும் தமது

நடிப்பாற்றலை, மொழியாற்றலை, நயக்குந்திறனை விருத்தி செய்து கொள்வது சிறந்தது.

எடுத்துக்காட்டுக்கு அகளங்கன் அவர்களின் **'பத்தினித் தெய்வம்'** நாட்டிய நாடகம் (2008) வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட **காவிய கதா நாட்டிய நாடகப் போட்டியில்** முதலிடம் பெற்றமை மனங்கொள்ளத்தக்கது.

போட்டியை மனங்கொண்டு இவை எழுதப்பட்டவை என்பது இதன் பொருளல்ல. இவற்றிலுள்ள நாடகங்களை வைத்து இவற்றைப் போல நடிக்கலாம். மூலக்கருத்தைச் சிதைக்காத வகையில் விரிவு படுத்தி நடிக்கலாம். இதனைப் பின்பற்றித் தேடல்களை மேற்கொண்டு எழுதியும் நடிக்கலாம். இதற்கு அகளங்கன் ஆசிரியரின் அனுமதியும் உண்டு.

நாவலர் தமிழுக்கா சைவத்துக்கா அதிக அளவிற் பணியாற்றினார் என்பது விவாதத்துக்குரிய பொருளாக்கப் படுவதுண்டு. நாவலர் பணி செய்தது சைவத்தமிழுக்கு என்று கூறலாம்.[3] என்பது போல அகளங்கனார் பணிகள் அமைய வேண்டும். **நான் உங்களுக்குத் தரும் முதுசொம் எதுவென்றால் மூதறிஞர் அகளங்கன் உங்களுடன் இருக்கிறார் என்பதுதான்**

அகளங்கன் அவர்கள் முழுமையாகச் சைவப்பணி புரிவதற்கான காலம் கனிந்துள்ளதாகத் தெரிகின்றது. இந்தப் பாநாடக நூல் அதற்கு நல்லதோர் உரை கல் என்று தெரிகின்றது.

**அடிக்குறிப்புக்கள்**

- வேலுப்பிள்ளை,ஆ.(2013), சைவ சமயம் அன்றும் இன்றும் இங்கும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, பக்-56
- தனபாலசிங்கன், செ.(1968), படைவீடு உடைய பரமன், ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம், பக்-48.
- வேலுப்பிள்ளை,ஆ(1985), தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, பக்-218.

# “மூதறிஞ! உன் அகவை நூறதாக!”

கம்பவாரிதி - இ. ஜெயராஜ்

உலகத்தார் உயர்ந்திடவே ஓங்கும் நல்ல
ஒப்பற்ற தமிழ் மொழியை அவனிக்கீந்து
வளமுற்ற இலக்கியங்கள் பலவும் தந்து
வான்முட்டும் பெரும்புகழைச் சேர்த்துத் தந்த
நிலம்முற்றும் போற்றுகின்ற நெடிய தெய்வம்
நிகரில்லா கந்தன்அவன் தாள்கள் தொட்டு
நலமுற்று **அகளங்கன் ஆறு பத்து**
**நல்லகவை** எய்தியதை வாழ்த்து கின்றேன்.

செந்தமிழின் பெருமையினைத் தேர்ந்து எண்ணி
தெவிட்டாத அவ்வமுதச் சுவையை உண்ண
பந்தமில்லா மனத்தாலே பாரில் இன்று
படித்தவரும் பின்நிற்கப் பார்த்து நின்றோம்.
நந்தமிழர் பெருமையினை நலியச் செய்து
நல்லதமிழ்ப் புலவர்களை இழியச் செய்து
வம்புதனை வளர்க்கின்ற அறிஞ ருள்ளே
**வற்றாத பேரூற்றாய்** வந்தோய் வாழ்க!

நம்முன்னோர் மூடர்எனும் நலிந்த கூற்றை
நல்லதமிழ் ஆய்வென்று நடத்தி நிற்கும்
தம்புத்தித் தரமறியாத் தகவு இல்லார்.
தமிழ்அறிஞர் என்றுதமைப் போற்றி நிற்க.
நும்புத்தித் திறத்தாலே நூல்கள் கற்று
நுண்பொருள்கள் பல உரைக்கும் **தர்மராச**!
கும்பிட்டு வாழாத கொள்கை யாள
குன்றாத தமிழ்உன்னைப் போற்றி நிற்கும்.

முன்வந்த அறிஞரெல்லாம் மூடர் என்று
மொழிகின்ற மேற்குலக அறிஞர் தம்மை
பொன்புத்திக் காரர்என்று புகழ்ந்து நிற்கும்
பொல்லாத கயவர்தமைப் போற்றி இந்த
மண்கெட்டுப் போவதற்கு வழியே செய்தார்.
மாண்புடைய பீடமதில் அமரச் செய்தார்
தன்கெட்டித் தனத்தாலே தனித்து நின்று
தமிழ்அன்னை தனைக்காத்தாய் தனய வாழி!

மரபுவழித் தமிழ்அதனின் மாண்பைக் கற்று
**மகத்தான நூல்கள்**பல மண்ணுக் கீந்தாய்
தரமிகுந்த **உரைகள்பல** செய்து நல்ல
தனிச்சபைகள் பலவற்றில் வெற்றி கொண்டாய்
உரமிகுந்த **கற்பித்தல்** நெறிய தாலே
**ஒப்பற்ற மாணாக்கர்** பலரைத் தந்தாய்
கரவறியா உன்தமிழின் தகுதி கண்டு
**கலாநிதியாய்** உலகுன்னைப் போற்றிற் றம்மா!

முல்லைநில வன்னிநகர் முகிழ்த்து நின்ற
**மூதறிஞ! உன் அகவை நூறதாக!**
எல்லையிலா உன்அறிவு ஏற்றங் கண்டு
இனிப்பலவாம் விருதுகளும் உன்ன தாக!
தொல்லைதரு பகைவரெலாம் தூரச் சென்று
துவண்டுவிட உன்வெற்றி தூய தாக!
நல்லை!என உனைப்பலரும் வாழ்த்தி நிற்க
நானிலத்தில் எந்நாளும் வாழ்க என்பேன்.

அம்புவியில் மென்மேலும் அறிவில் ஓங்கி
அற்புதமாம் பலசெயல்கள் செய்க என்றே
உம்அகவை மென்மேலும் உயர்ந்து நல்ல
ஒப்பற்ற நற்பயன்கள் விளைக என்றே
தெம்புதர அறிவுலகில் மேலும் மேலும்
தேற்றமுற தெளிவுடனே வளர்க என்றே
**கம்பனது கழகத்தார்** மகிழ்ந்து நல்ல
கனிவுடனே **மணிவிழாவில்** வாழ்த்தி நின்றோம்.

# முன்னுரை

**சை**வ சமயம் சார்ந்த ஐந்து பா நாடகங்கள் இந் நூலில் இடம்பெறுகின்றன. நான் அவ்வப்போது எழுதிய இந்தப் பா நாடகங்களுக்கு அச்சுச் சிம்மாசனம் ஏறும் அரியநாள் இப்போதுதான் வாய்த்திருக்கின்றது.

சைவ சமய குரவர் நால்வரின் வாழ்க்கைச் சம்பவங்களில் ஒரு சில பகுதிகளும், விநாயகப் பெருமான் ஞானப்பழம் பெற்ற கதையும் பா நாடகங்களாக்கப்பட்டுள்ளன.

கவிதைகளிலே எனக்கிருந்த ஈடுபாடு என்னை இம் முயற்சியைச் செய்யவைத்தது. யாழ்ப்பாணத்து சோமசுந்தரப் புலவர், மகாகவி, கவிஞர் முருகையன் முதலானோரும், மட்டக்களப்பு நிலாவணனும், திருகோணமலைக் கவிராயரும், வேறு சிலரும் பாநாடகங்களை நூலாக்கியுள்ளனர்.

அந்த வகையில் வவுனியாவில் இந்தப் **பா நாடக** நூலே முதல் நூல் என நினைக்கிறேன். **மேடை நாடக நூல், வானொலி நாடகநூல், நாட்டிய நாடக நூல்** என நாடகத் துறையில் பல நாடக நூல்களை வெளியிட்ட அனுபவத்தோடு இந்த **"ஞானப் பழம்"** என்ற பா நாடக நூலையும் வெளியிட முயன்றுள்ளேன்.

இந்நாடகங்கள் படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்ற வகையில் இரண்டு வகைப் பயன்பாடுகள் கருதி எழுதப்பட்டுள்ளன. நல்ல தமிழோடு உறவாடுவோம். நல்ல தமிழில் உரையாடுவோம்.

இந் நாடகங்களை மேடையேற்றுபவர்கள் எனது அனுமதியைப் பெறவேண்டியதில்லை. ஆனால் தகவல் தந்தால் மகிழ்வேன்.

இந்நூலை வெளியிடும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினர்க்கும், குறிப்பாக செயலாளர் **கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்** அவர்களுக்கும் எனது நன்றி.

நல்லதொரு அணிந்துரையை வழங்கிய யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் **திரு.முருகேசு கௌரிகாந்தன்** அவர்களுக்கு என் நன்றி.

வாழ்த்துக் கவிதை வழங்கிய **கம்பவாரிதி இ.ஜெயராஜ்** அவர்களுக்கும், என் நூல் வெளியீடுகளுக்கு உற்சாகம் தந்து உதவிவருபவர்களான **சிவநெறிப்புரவலர், சமூக சஞ்சீவி, தமிழியல் வித்தகர் சி.ஏ.இராமஸ்வாமி ஐயா** அவர்களுக்கும், **அருட்கலை வாரிதி, கலாபூஷணம், ஸ்தபதி சு.சண்முகவடிவேல்** அவர்களுக்கும் என் நன்றி.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த வாணி கணினிப் பதிப்பகத்தாருக்கும்,

வழமைபோல இந்நூல் வெளியீட்டுக்கும் உதவி செய்த என் தம்பியும் **"உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை"யின் ஸ்தாபகரும், தலைவருமாகிய திரு.க.குமாரகுலசிங்கம் (சிங்கம்)** அவர்களுக்கும்,

இந்நூல் வெளியீட்டுக்கும் சகல உதவிகளையும் செய்து பிரதிகளை ஒப்புநோக்கி உற்சாகப்படுத்திய என் மனைவிக்கும் என் நன்றி.

எனது ஏனைய நூல்களுக்குத் தந்த வரவேற்பை இந்த நூலுக்கும் எனது வாசகர்கள் தரவேண்டுமென பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

வாழ்க சைவம். வளர்க தமிழ்.

**அகளங்கன்**
தமிழ் அதர்
90, திருநாவற்குளம்,
வவுனியா.

உ

# ஞானப் பழம்

(பா நாடகம்)

(காப்பு)

ஓங்கார ரூபனே! உமையவள் பாலனே
தீங்கான தில்லாத் திருமகனே - பாங்கான
ஒற்றைத் திருக்கொம்பு ஒளிரும் அருள்வடிவே
எற்றைக்கும் நீஎமக்குக் காப்பு.

## காட்சி 1

இடம் :- திருக்கைலாய மலை

பாத்திரங்கள் :- சிவபெருமான், உமாதேவியார், முருகன், விநாயகர், நாரதர், முனிவர்கள், பூத கணங்கள்,நாட்டிய மாதர்கள்.

முனிவர்கள் :- (பெண்கள் நாட்டியமாடுகிறார்கள். நாட்டியம் முடிந்ததும்)
ஓம் நம சிவாய!
ஓம் நம சிவாய!
சிவாய நம ஓம்!
சிவாய நம ஓம்!
(வழிபடுகிறார்கள்)

பூதகணங்கள் :- அரோகரா! அரோகரா!
(பூதர்கள் ஆடுகிறார்கள்)

நாரதர் :- (அங்குவந்து)
சம்போ மகாதேவா
சம்போ மகாதேவா!

சம்புவும் நீயே!
சுயம்புவும் நீயே!

சங்கரன் நீயே!
சங்காரன் நீயே!

அம்புயன் மாலறி யாத திறத்து
எம்பெரு மானே! இறைஞ்சுகின் றேனே.

சிவபெருமான் :- தாமரை ஆசனன் தண்ணருள் மைந்தனே!
தாய்சரஸ் வதிமகிழ் சத்திய வந்தனே!

திரிலோக சஞ்சாரி! திரிகால முணர்யோகி!
அரிபிர மாதியர் அருகமர் ஞானி!

உன்வர விங்கென்றும் நல்வர வாகட்டும்
உன்புகழ் இந்த உலகெங்கும் ஓங்கட்டும்.

உமாதேவியார் :- நாரதன் வரவிங்கு நல்வர வாகட்டும்
நம்புகின்றோம் உனக்கென்
நல்லாசி இருக்கட்டும்.

நாரதன் :- அப்பனும் அம்மையும் அருகருகாய் உள்ள
ஆனந்தக் காட்சியைக் காண்பதற்கு
இப்பொழு தல்லவோ எனக்கது வாய்த்தது
இனியென்ன பேறெனக் குண்டு.

சிவபெருமான் :- புத்திரர் இருவரும் எம்மோ டிருப்பது
புரியவில் லைப்போலும் நாரதரே.

இத்திறம் நீகாண இன்றுனக் கருள்செய்தோம்
இனிச் சொல்லும் வந்ததேன் நாரதரே.

உமாதேவியார் :- நாரதன் வந்திட்டால் நல்லதா நடந்திடும்?
நாரதன் தானே கலகத்தின் பிறப்பிடம்.

நாமின்று நால்வரும்
சேர்ந்தொன்றாய் இருப்பதை
நாரதன் கண்டது நல்லதற் காகுமோ?

சிவபெருமான் :- கையிலே என்ன நாரதரே
கனியொன்று போல இருக்கிறதே.

நாரதர் :- எம்பெரு மானே! ஈசனே! இங்குநான்
இக்கனி தரவே கொண்டுவந் தேனே.

இக்கனி அருங்கனி இனியதோர் மாங்கனி
இக்கனி தங்களுக் கேற்றதோர் கனியாம்.
(நாரதர் கனியைச் சிவபெருமானிடம்
கொடுக்கிறார்)

சிவபெருமான் :- நல்லது நாரதா நல்லது - இக்கனியை
நமக்கெனக் கொணர்ந்தாய்
நாம் உளம் மகிழ்ந்தோம்.

இருப்பினும் இதனை
நான் உண்ணல் முறையோ.
அதனால் இதனை.....
அன்னைபார் வதியிடம் அளிக்கிறேன்.
(சிவபெருமான் உமாதேவியாரிடம்
கனியைக் கொடுக்கிறார்.)

உமாதேவியார் :- நான் ஒரு மனைவி. அத்தோடு தாயுமாம்.
நான் இதை எப்படித் தனியே உண்பேன்.

நாங்கள் நால்வரும் பகிர்ந்திதை உண்போம்.
நாரதா! நன்றி. சென்று நீ வருக.

நாரதர் :- தாயே இக்கனி பகிர்ந்துண்ண அல்ல
தனியாய் உண்டிடல் வேண்டும் தாயே.

உமாதேவியார் :- அப்படி யானால் யாரிடம் கொடுப்பது
அப்பனே நாரதா இப்படி வாநீ.

சிவபெருமான் :- பிள்ளைகள் இருவரில் ஒருவர் உண்ணட்டும்
பிள்ளைகள் உண்டால் பெற்றோர்க் கின்பம்.

உமாதேவியார் :- யாருக்குக் கொடுப்பேன். யாருக்குக் கொடுப்பேன்.
நாரதா நானிதை யாருக்குக் கொடுப்பேன்.

விநாயகர் :- அம்மா நான்தான் மூத்தவன்; எனக்கே
அரியஇக் கனியை அளித்திட வேண்டும்.

முருகன் :- அம்மா நான்தான் இளையவன் - என்றும்
இளையவ னுக்கே உணவில் முதலிடம்.

விநாயகர் :- அம்மா! எனக்கு, அம்மா! எனக்கு.

முருகன் :- அம்மா! எனக்கு, அம்மா! எனக்கு.

உமாதேவியார் :- இப்பொழுது என்ன செய்திட முடியும்
இருபிள்ளை களுமே எனக்குச் சமமே.
இக்கனியை நான் யாருக்குக் கொடுப்பேன்.
இறைவா இதற்கொரு வழியைச் சொல்லுங்கள்.

சிவபெருமான் :- நாரதன் இன்று நல்லதோர் கலகத்தை
நமதுவீட் டினிலே நடத்தத் துணிந்தான்.

என்ன நாரதா! ஏன்நீ முழிக்கிறாய்.
எல்லாம் நன்றாய் நடக்கஎன் வாழ்த்து.

நாரதர் :- சிவ சிவ சிவ சிவா.
தேவரீர் அறியாச் சிந்தையும் உண்டோ.
தேவரீர் எனக்கருள் செய்திடல் வேண்டும்.

சிவபெருமான் :- நாரதன் கலகம் நல்லதில் முடியும்.
நல்லா சிகள்உனக்கு என்றும் உண்டு.

நாரதர் :- இருவரில் ஒருவர்க்கே இக்கனி உரியது.
எம்பெரு மானே இதற்கோர் வழி சொல்லும்.

சிவபெருமான் :- பிள்ளைகள் இருவர்க்கும்
போட்டியை வைப்போம்
போட்டியில் வெல்பவர்
பரிசாய்ப் பெறட்டும்.

நாரதர் :- நல்லது, நல்லது. அதுதான் சரியாம்.

முருகன், விநாயகர்:- என்ன போட்டி. என்ன போட்டி.
(இருவரும்)

சிவபெருமான் :- சண்முகா! விநாயகா!
சரியாய்க் கேளுங்கள் .
உலகைச் சுற்றி முதல்வரு பவரே
உண்ணட்டும் கனியை. அவர்க்கே மாங்கனி.

முருகன் :- உலகைச் சுற்றவா, இதோ நான் செல்கிறேன்.
மயிலிலே ஏறுவேன். மனோ வேகத்தில்
உலகைச் சுற்றுவேன். ஒருநொடிப் பொழுதில்
(முருகன் எழுந்து செல்கிறார்)

விநாயகர் :- அப்பா!
உலகம் என்றால் என்ன - அம்மை
அப்பர் என்றால் என்ன.

சிவபெருமான் :- அம்மை அப்பரே உலகம்
உலகே அம்மை அப்பர்.
நாமில்லாத உலகம் இல்லை.
நாமே உலகம். நாமே சர்வமும்.

விநாயகர் :- உலகத்தை ஒரு நொடியில்
வலம்வந்து காட்டு கிறேன்
(அம்மை அப்பரைச் சுற்றுதல்)
எனக்கே மாங்கனி எனக்கே மாங்கனி
(தாயின் கையிலிருந்த
மாங்கனியைப் பெறுகிறார்)

முருகன் :- (முருகன் வந்து பார்க்கிறார்)
அண்ணனின் கையில் மாங்கனி!
அண்ணன் உலகை எப்போது சுற்றினார்.
அண்ணன் எப்படி எனக்குமுன் சுற்றினார்.
அம்மா! இதுஎன்ன அதிசயம் அம்மா!

உமாதேவியார் :- அம்மை அப்பரே உலகம் என்றான்.
ஆண்டவர் அதனை ஏற்றுக் கொண்டார்.
எங்கள் இருவரைச் சுற்றிய கணபதி
என்கைக் கனியைப் பெற்றான் முருகா.

முருகன் :- இல்லை. இல்லை. இது முறை இல்லை.
மூத்தவன் தானே செல்லப் பிள்ளை
இளையவன் எடுப்பார் கைப்பிள்ளை தானே.
இனிஇங்கு நிற்கேன். இன்றே செல்கிறேன்.

உமாதேவியார் :- முருகா! முருகா!
எங்கே செல்கிறாய் எங்கே செல்கிறாய்.
இங்கே நில்லு. இங்கே நில்லு.

முருகன் :- எனக்கென உலகைப் படைக்கப் போகிறேன்.
எனக்கினி இங்கே எதுவுமே இல்லை.

சிவபெருமான் :- முருகா! மூர்க்கம் வேண்டாம் உனக்கு.
உண்மையை உணர்ந்துகொள்
செல்லாதே நில்.

விநாயகர் :- தம்பி! தம்பி! இந்தா பிடி
மாங்கனி உனக்கே. வா! வா! முருகா.

முருகன் :- வேண்டாம் வேண்டாம்
நான் வர மாட்டேன்.
(முருகன் செல்கிறார்)

## காட்சி - 2

இடம் :- பழநி மலை

பாத்திரங்கள் :- சிவபெருமான், உமாதேவியார், முருகன், விநாயகர், ஔவையார், நாரதர்.

(முருகன் பழநி மலையில் கோவணத்தோடு தண்டுன்றி ஆண்டியாய் நிற்கிறார். ஔவையார் வருகிறார்.)

ஔவையார் :- முருகா! முருகா!
இது என்ன கோலம்.
இது என்ன கோலம்.

அரையிலே கோவணம்.
கையிலே தண்டு.
ஆண்டியாய் ஆனதேன் முருகா - பழநி
ஆண்டியாய் ஆனதேன் முருகா.

முருகன் :- இது தான் இனிஎன் கோலம் பாட்டி

ஔவையார் :- கோபம் தகாது. கோபம் தகாது.
கோபத்தை விட்டிடு முருகா - இந்தக்
கோலத்தை விட்டிடு முருகா.

பெற்றோர் உறவினர் சகோதரரிடத்தும்
பெரியோர் நண்பர் குரு இவரிடத்தும்
கோபம் கொள்வது முறையா முருகா

கோபத்தை விட்டிடு முருகா - இந்தக்
கோலத்தை விட்டிடு முருகா.

முருகன் :- இல்லை. இல்லைப் பாட்டி
இனிமேல் இதுதான் என்கோலம் பாட்டி.

ஔவையார் :- கையில் கோலுடன் ஆண்டியாய் நிற்பதோ
கந்தனே உன்னுடைக் கோலம் நீ சொல்லாய்.
ஞானப் பழம்நீ முருகா
உனக்கேன் மாம்பழம் முருகா.

முருகன் :- தந்தையும் தாயும் தனயனை வெறுத்தால்
தடியும் துண்டும் தான் தஞ்சமென் றறிவாய்

ஔவையார் :- ஈசனின் விளையாட்டு இதுவென அறிவாய்
இறை உமைதானே உலகென்று உணர்வாய்.

நீ சுற்றிவந்த உலகத்தில் எங்கும்
நின் தந்தை தாயே நிறைந்துபோய் உள்ளார்.

நீ சுற்றி வந்ததும் தாய் தந்தையைத் தான்.
நீ அதன் உண்மையை உணர்ந்திடு முருகா.

முருகன் :- ஔவையே! ஔவையே!
அப்படி என்றால் அண்ணன் சுற்றியது....

ஔவையார் :- ஈசனும் உமையும் தானே உலகம்.
இவர்கள் இன்றி உலகம் ஏது.

கணபதி அம்மை அப்பரைச் சுற்றி
கணப்பொழு தினிலே உலகைச் சுற்றினான்.

இதுதான் தத்துவம் இதுதான் உண்மை
இதனை உணர்வாய் முருகா முருகா.

சிவபெருமான் :- (அங்கு வருகிறார்)
முருகா இது ஒரு திருவிளையாடல்
இதற்கோர் கருத்து உண்மையில் உண்டு.

உமாதேவியார் :- (அங்கு வருகிறார்)
முருகா! வா என் அருகினில் வந்து நில்.
மூத்தவன் இளையவன் பேதம் இல்லை.
பிள்ளைப் பாசத்தில் பெரிதும் சிறிதும்.
பேதம் காண்பது தாய்மையே இல்லை.

விநாயகர் :- (அங்கு வருகிறார்)
முருகா நீ ஓர் கனிபெற நானே
முழுதாய் உதவுவேன் அதுவரை காத்திரு.

நாரதர் :- (அங்கு வருகிறார்)
நான் செய்த கலகம் நன்மையாய் முடிந்தது.
நாட்டுக்கு நல்லதோர் தத்துவம் கிடைத்தது.

சக்தி இருப்பவன் புத்தியை நாடான்.
புத்தி இருப்பவன் சக்தியை வேண்டான்.

முருகா உனக்கோர் அருங்கனி தருவேன்
மூத்தவன் உனக்கு உதவுவான் அன்று.

ஔவையார் :- (யாவரும் ஒன்றாய் நிற்கிறார்கள்)
சிவ பெருமானே! செஞ்சடைக் கடவுளே!
சீலம் மிக்களம் தேவி உமையே!
கந்தா! கணபதி! எங்களுக் கருள்வீர்!
காலம் காலமாய் காத்திடும் எம்மை
என்றும் இப்படி இருந்து யாவர்க்கும்
என்றும் அருளை இனிதே பொழிவீர்.

சிவம் - சுபம்

**தத்துவம்**

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தின் மறைந்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்**
**பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே**
**(திருமந்திரம் - திருமூலர்)**

உ

# ஞானக் குழந்தை

(பா நாடகம்)

## காட்சி 1

இடம் : வீடு (சீர்காழி)

பாத்திரங்கள் : சிவபாத இருதயர்(திருஞான சம்பந்தரின் தந்தையார்), பகவதியார் (திருஞான சம்பந்தரின் தாயார்), திருஞானசம்பந்தர்

(திருஞானசம்பந்தர் (மூன்றுவயதுக் குழந்தை) தாயுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார்.)

சிவபாதஇருதயர் : நான்...
தோணிபுரத்து ஈசனைத்
தொழுதுவிட்டு வருகிறேன்.
நீ ....
அம்மாவோடு விளையாடிக் கொண்டிரு.
(பிள்ளையை அணைத்து முத்தம் கொடுக்கிறார்.)

திருஞானசம்பந்தர் : நானும் வருகிறேன் - அப்பா
நானும் வருகிறேன்

சிவபாதஇருதயர் : இல்லை இல்லை
நீ ....
அம்மாவுடன் விளையாடு.
நான் .....
அவசரமாய்ப் போய் வருவேன்.

திருஞானசம்பந்தர் : ம்.. ம்.. (அழுகிறார்)
நானும் வருகிறேன்
நானும் வருகிறேன்
(அடம் பிடிக்கிறார்)

பகவதியார் : கூட்டித்தான் செல்லுங்களேன் - இவனும் கும்பிடட்டும் ஈஸ்வரனை.

சிவபாதஇருதயர் : சரி சரி அழாதே.
வா! வா!!
(தூக்கிச் செல்கிறார்)

## காட்சி 2

இடம் : குளக்கரை

பாத்திரங்கள் : சிவபெருமான், உமாதேவியார், திருஞானசம்பந்தர், சிவபாதஇருதயர்

சிவபாதஇருதயர் : இவ்விடத்தில் இருந்துகொள்
எங்கும் செல்லாதே.
குளத்தில் நான் இறங்கிக்
குளித்துவிட்டு வருகிறேன்.
(குழந்தையை இருத்திவிட்டுச் செல்கிறார்)

திருஞானசம்பந்தர் : சரி சரி
நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.
நீங்கள்
பயமில்லாமல் குளித்துவிட்டு வாருங்கள்.

சிவபாத இருதயர் : எனக்குப் புத்தி சொல்கிறானே. (சிரிப்பு)
சரி சரி

கவனம்! கவனம்!
தோணியப்பரே துணை.
(சிவபாதஇருதயர் தண்ணீரில் மூழ்கிறார்.
திருஞானசம்பந்தர் அழுகிறார்.)

திருஞானசம்பந்தர் : அம்மா...! அம்மா...!
அப்பா...! அப்பா...!
அம்மா...! அப்பா...!
(அழுகிறார்)

சிவபெருமான் : தேவி.....!
குழந்தையின் அழுகுரல்
ஆம் ...
அழுகுரலே தொழுகுரலாய்.
வா... வா... நாம்
இப்போதே அங்கு செல்வோம்
(இருவரும் இடப வாகனத்தில் வருகின்றனர்)
தேவி....!
ஞாலத்தின் தாய் நீ
இந்தக் குழந்தைக்கு உன்
பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்துகொடு

உமையம்மையார் : வா! மகனே வா!
(அள்ளி அணைக்கிறார். கண்ணீரைத்
துடைத்து தாய்ப்பாலை பொற்கிண்ணத்தில்
கறந்து ஊட்டுகிறார்)

சிவபெருமான் : சரி, சரி
அழுகை தீர்ந்தது.
அடுத்து நடப்பதை
அங்கிருந்து பார்ப்போம்.

சிவபாத இருதயர் : (கரைக்கு வருகின்றார்)
மகனே! என்ன இது (பதைபதைத்து)
வாயில் பால் வடிகிறதே !
வா! மகனே வா!!
உனக்குப் பால் தந்தவர் யார்
சொல்.....
சொல் மகனே சொல்!
சொல் மகனே சொல்!
(அடிப்பவர் போல மிரட்டுகிறார்)

திருஞானசம்பந்தர் : (கோவிலைக் காட்டியபடி பாடுகிறார்)

**தோடுடைய செவியன்விடை யேறிஓர்**
**தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்**
**உள்ளங் கவர்கள்வன்**
**ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்து**
**ஏத்த அருள்செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய**
**பெம்மான் இவன்அன்றே**

சிவபாத இருதயர் : (கட்டி அணைத்து, முத்தம் கொடுத்து, உச்சிமுகர்ந்து)
ஆகா.. ஆகா...
அற்புதம், அற்புதம்.
இது....
சாதாரண குழந்தையல்ல,
அம்பிகையிடம் ஞானப்பால் உண்ட
ஞானக்குழந்தை. ஞானக்குழந்தை.
(தூக்கிக்கொண்டு கோவில் நோக்கிச் செல்கிறார்)

## காட்சி 3

இடம் :- தில்லை

பாத்திரங்கள் :- திருநாவுக்கரசு நாயனார், சிவனடியார்கள் சிலர்

(உழவாரத்தால் கோயிலின் பின்புறத்தைச்
செருக்கிக் கொண்டு நிற்கிறார்கள்)

திருநாவுக்கரசர் :- தில்லையிலே எழுந்தருளித்
திருநடனம் புரிகின்ற
எல்லையில்லாப் பரம்பொருளே!
எம் பிரானே! ....

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண் நீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுமாய்
இலங்குகின்ற எம்பிரானே!

கனித்த மொழியாள் - சிவ
காமியம்மை காதலனே!

அனைத்து உயிர்களையும்
அணைக்கின்ற ஆண்டவனே!

எல்லோரும் உன்னருளில்
இன்புற்றிருக்கட்டும்

ஓம் .... நம சிவாய ... சிவாய நம ஓம்.

அடியார் ஒருவர் :- (வந்து வணங்கி)
நாவுக் கரசப் பெருமானே!
நற்செய்தி நானறிந்தேன்.

சோழ வள நாட்டுச்
சுந்தரச் சீர் காழியிலே

நாளும் சிவ பூசை
நடத்துகின்ற குலத்தினிலே
பிறந்திட்ட பிள்ளை பற்றிப்
பேசுகின்றார் எல்லோரும்.

திருநாவுக்கரசர் :- அப்படியா!
என்ன செய்தி சொல்லுங்கள்.
எல்லாம் சிவ மயமே.

அடியார் ஒருவர் :- மூன்று வயதே
நிரம்பிய பிள்ளையாம். - அது.....
அழுத குரல் கேட்டு
அரனார் உமையோடு
குளக்கரைக்கு வந்து
குழந்தைக்கு அருள் செய்தார். - அம்மை
ஞானப்பால் ஊட்ட
ஞான சம்பந்தனாய்
பாடல்கள் பாடிப்
பரவிடுதாம் அக்குழந்தை.

திருநாவுக்கரசர் :- ஆகா.... ஆகா... அற்புதம்.... அற்புதம்....

அடியார் ஒருவர் :- சோழ வள நாட்டுள்ள
சுந்தரனார் கோவிலெங்கும்

சூழ அடியார்களுடன்
சுற்றுகுதாம் அக்குழந்தை.

திருநாவுக்கரசர் :- ஆகா... ஆகா....
அந்தக் குழந்தையை
அடியேன் நான் காணவேண்டும்.
அம்மையது.....
ஞானப்பாலுண்ட
ஞானசம்பந்தப் பிள்ளையாரின்
காலை என் தலைவைத்துக்
கர்மவினை போக்க வேண்டும்.

இப்போதே புறப்படுங்கள்
இனி நிற்க நேரமில்லை.

தில்லைப் பெருமானே
சென்றுநாம் வருகின்றோம்.

ஓம்.... நமசிவாய....
சிவாய நம ஓம்.

## காட்சி 4

இடம் :- சீர்காழி

பாத்திரங்கள் :- திருஞானசம்பந்தர், சிவபாத இருதயர், பகவதியார், அடியார்கள் சிலர்.

அடியார் ஒருவர் :- (வந்து வணங்கி)
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்.
செய்தியொன்று கொண்டுவந்தேன்.
திருவடிக்கு விண்ணப்பம்.

திருஞான சம்பந்தர்:- சொல்லுங்கள் சொல்லுங்கள்
நல்ல செய்திதானே.

அடியார் ஒருவர் :- பல்லவரின் நாட்டினிலே
பல்வேறு இடர்பட்டு,
சொல்ல வொண்ணாத் துன்பங்கள்
சோதனைகள் தனை வென்று.

நம் சைவ சமயத்தை
நலம் விளங்க நாட்டியவர்.

•

எங்கும் சிவநாமம்
எழுந்து எதிரொலிக்கச்
செய்த சிவத்தொண்டர்
திருநாவுக்கரசர் - தங்களை
நாடி வருகின்றார்.

திருஞான சம்பந்தர்:- என்ன!...
நாவுக்கரசர் பெருமானா?
நம் பெருமான், ....
சூலை நோய் கொடுத்துச்
சுகப் படுத்தி ஆட்கொண்டு,
நாவுக் கரசர் எனும்
நற்பெயரும் கொடுத் தழைத்த
நல்லபெருந் தொண்டனார்
நமைக்காண வந்தாரா?

இப்போதே புறப்படுவோம்.
எழுந்திடுங்கள் வரவேற்போம்.
(எல்லோரும் செல்கின்றனர்)

## காட்சி 5

இடம் :- வழி

பாத்திரங்கள் :- திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சிவபாத இருதயர், பகவதியார், அடியார்கள்.

(சிவபாத இருதயர், திருஞான சம்பந்தரை தோளில் தூக்கிச் செல்கின்றார். இருவரது தொண்டர்களும் சந்திக்கின்றனர். திருஞான சம்பந்தர் தந்தையாரின் தோளிலிருந்து இறங்கி நடந்து செல்கிறார். திரு நாவுக்கரசர் திருஞானசம்பந்தரின் கால்களில் விழுந்து வணங்குகிறார். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரது கால்களில் விழுந்து வணங்குகிறார். திரு நாவுக்கரசர் தடுத்து மீண்டும் திருஞான சம்பந்தரது காலில் விழுந்து வணங்குகின்றார். அடியார்களும் மாறிமாறி வணங்குகிறார்கள்)

திருஞானசம்பந்தர் :- தாங்கள் என் தந்தைக்குச் சமம்.
அதனால் இது தகாது.
அப்பரே! எழுந்திருங்கள்
(திருநாவுக்கரசரை திருஞான சம்பந்தர் தோள்களில் தொட்டு நிமிர்த்துகிறார்.)

திருநாவுக்கரசர் :- ஞானக் குழந்தையே!
நற்பேறு நான் பெற்றேன்.
சிவபெருமான் திரு வருளைச்
சின்ன வயதினில் பெற்ற
சிவ! ஞானக் குழந்தையே!
என்னே என் பாக்கியம்.

தங்கள் திரு வடியைத்
தலையில் சூடு தற்கு
எங்கள் பிரான் அருளால்
இங்கு வந்தேன்.

திருஞானசம்பந்தர் :- சிவபெருமான் ......
சூலை நோய் கொடுத்துச்
சுகப்படுத்தி ஆட்கொண்ட
சாலப் பெரியவரே!
தங்களது......
காலை வணங்கிடவே
கடுகிவந்தேன் நானிங்கு.

## காட்சி6

இடம் :- பாண்டிய நாடு

பாத்திரங்கள் :- பாண்டிமாதேவி, குலச்சிறையார் (முதன் மந்திரி)

(பாண்டிமாதேவி தனியாகக் கவலையுடன்
இருக்கிறார். குலச்சிறையார் வருகிறார்)

குலச்சிறையார் :- சோழர் குலக் கொழுந்தே!
பாண்டியனார் பத்தினியே!
வணக்கம்.
செய்தியொன்று சொல்லவந்தேன்.

பாண்டிமாதேவி :- அமைச்சரே!
சொல்லுங்கள்.

குலச்சிறையார் :- தங்கள் தாய் நாட்டுத்
தங்கக் குழந்தை,

சீர்காழிப் பதிப்பிறந்த
திருஞானசம்பந்தர்

திருமறைக் காட்டில்
தங்கியுள்ளாராம்.

அவர் இங்கு வந்தால் - தங்கள்
துயர் முற்றும் நீங்கும்.

பாண்டிமா தேவி :- சமணர்கள் கொடுமையைச்
சகிக்க முடியவில்லை.
என் கணவரும் - அந்தச்
சமணச் சகதியிலே
சறுக்கி விழுந்து விட்டார்.

பாண்டிய நாட்டை மீட்கும்
பணி எங்கள் பொறுப்பிலுண்டு.

பண்டைச் சைவத்தைப்
பார்முழுதும் பரப்பு கின்ற
தொண்டைச் செய்வதற்கு ....

ஞானக் குழந்தையினை
நாமிங்கு வரவழைப்போம்.

குலச்சிறையார் :- ஆம் - ஆம்
அது சொல்லவே இங்கு
அவசரமாய் நான் வந்தேன்.
என்ன செய்வோம்.

பாண்டிமாதேவி :- அறிவிற் சிறந்த சில
அன்பர்களை விரைந்தனுப்பி

நெறியிற் பிறழாத - அந்த
நிர்மலக் குழந்தையினை

விரைவில் அழைப்பியுங்கள்
வேறினிக் கதியில்லை.

## காட்சி 7

இடம் :- திருமறைக்காடு

பாத்திரங்கள் :- திருஞானசம்பந்தர், அடியார்கள், பாண்டிய நாட்டுப் பெரியவர்கள் சிலர்.

அடியவர் ஒருவர் :- (வந்து திருஞான சம்பந்தரை வணங்கி)
ஓம் நமச்சிவாய.
சிவாய நம ஓம்.
பாண்டிய நாட்டிருந்து
பண்பட்ட பெரியோர் வந்தார்.
தங்களைக் ...
காண்டிட ஆசை கொண்டார்
காத்திருக் கின்றார்.

திருஞான சம்பந்தர் :- அழைத்து வாருங்கள்.

பெரியோர் 1 :- (திருஞானசம்பந்தரின் பாதம் பணிந்து)
பாண்டியன் நெடுமாறன்
பண்டையநம் நெறிவிட்டு
சமணப் படுகுழியில்
சங்கம மாகிவிட்டான்.

திருநீற்றின் ஒளியின்றித்
திருமறையின் ஒலியின்றிப்

பாண்டிய நாடே - சமணப்
பாரிருளில் மூழ்கிற்று.

தாங்களே எம்மைக் காத்துச்
சைவஒளி ஏற்ற வேண்டும்.

பெரியோர் 2 :- பாண்டிமா தேவியாரும்
பண்பட்ட நல்லமைச்சர் .....
குலச்சிறை யாரும் நம்மைக்
கூப்பிட்டு அனுப்பி வைத்தார்.

தாங்கள் அங் கெழுந்தருளிச்
சைவத்தை மீட்க வேண்டும்.

சிவவழி பாட்டை மீண்டும்
திசையெங்கும் பரப்ப வேண்டும்.

பெரியோர் 1 :- பாண்டிய நாட்டில் சைவம்
பண்டுபோல் சிறக்க வேண்டும்.
மீண்டும் எம் சைவ மக்கள்
மேன்மையாய் வாழ வேண்டும்.

திருஞானசம்பந்தர் :- சிவனருள் அதுவே யானால்
சிறிதும் நாம் தாமதியோம்.
விரைவினில் வருவோம் அங்கு
விடையவர் நெறி வளர்ப்போம்.

பெரியோர்கள் :- நன்றி.. நன்றி..
ஓம் நமச்சிவாய.
சிவாய நம ஓம்.

திருஞானசம்பந்தர் :- பாண்டிமா தேவியார்க்கும் - அமைச்சர்
குலச்சிறை யார்க்கும் - எங்கள்
அன்பினைச் சொல்லி - சிவனார்
அருளினில் இருக்கச் சொல்வீர்.

## காட்சி 8

இடம் :- திருமறைக்காடு

பாத்திரங்கள் :- திருஞானசம்பந்தர்,
திருநாவுக்கரசர், அடியார்கள்

திருஞானசம்பந்தர் :- அப்பர் பெருமானே!
ஆலவாய் அண்ணலார்
அமர்ந்துள்ள மதுரையிலே
சமணம் பரவியதைத் தாமறிவீர்.

பாண்டிமா தேவியாரும் ....
வேண்டுகோள் விடுத்தார் - என்னை
விரைந்தங்கு வரச் சொல்லி,

ஆதலால் பாண்டி நாட்டிற்கு
அடியனேன் செல்லவுள்ளேன்.

திருநாவுக்கரசர் :- சமணரோ வஞ்சகர்கள்.
சற்றேனும் இரக்கமில்லார்.

நான் பட்ட பாடு இந்த
நானிலம் நன்கறியும்.

தாங்கள் அத் தொல்லைகளைத்
தாங்கவும் தான் முடியுமோ.

திருஞானசம்பந்தர் :- அப்பரே! அஞ்ச வேண்டாம்.
அநியாயக் கார அந்த
அமணரை வெற்றி கொண்டு
இனியங்கு சமணர்களை
இல்லாமற் செய்திடுவேன்.

சைவ ஒளி ஏற்றிச்
சமண இருள் போக்கிடுவேன்.

எம் சிவனார் அருளுண்டு
இதற்கு நீர் அஞ்ச வேண்டாம்.

திருநாவுக்கரசர் :- நாளும் கோளும்
நல் நிலையில் இல்லையே.
அதுதான் வருந்துகிறேன்.
அவசரம் காட்ட வேண்டாம்.

திருஞானசம்பந்தர் :- அரனாரின் அன்பர்களை
அவையெல்லாம் என்ன செய்யும்.
எந் நாளும் அடியார்க்கு
இனிய நன் நாளேயாகும்.
(வேயுறு தோளி பங்கன் தேவாரம் பாடுகிறார்)

**வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்**
**மிக நல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனிபாம் பிரண்டு முடனே**
**ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே**

திருநாவுக்கரசர் :- அதுதான் முடிவென்றால்
அடியேனும் வருகின்றேன்.

திருஞானசம்பந்தர் :- தாங்கள் வரவேண்டாம்.
தங்கி இங்கே இருங்கள்.
நாங்கள் செல்கின்றோம்
நமக்கு விடை தாருங்கள்.
(வணங்கி விடைபெற்றுச் செல்கின்றனர்)

## காட்சி 9

இடம் :- திருவாலவாய் ஆலயம்.

பாத்திரங்கள் :- திருஞான சம்பந்தர், அடியார்கள், பாண்டிமாதேவி, குலச்சிறையார்,

(திருஞானசம்பந்தர் அடியார்களோடு வருகின்றார்)

அடியார்கள் :- அரோகரா! அரோகரா!

குலச்சிறையார் :- (திருஞான சம்பந்தரின் கால்களில் விழுந்து வணங்குகிறார். திருஞானசம்பந்தர் தொட்டுத் தூக்குகிறார்.)

தங்களின் வரவால் இந்தத்
தாரணி புனிதமாச்சு.

மங்கையர்க் கரசியாராம் - எங்கள்
மகாராணி யாரின் சார்பாய்
உங்களை இங்கே நின்று
உளமார வரவேற்கின்றேன்.

திருஞானசம்பந்தர் :- ஓம் நம சிவாய.
சிவாய நம ஓம்.
இராணியார் நலமா?

குலச்சிறையார் :- ஆலவாய்ப் பெருமான் தன்னை
அன்புடன் வணங்குதற்காய்
ஏலவே வந்து உள்ளே
இருக்கின்றார்.
வாருங்கள் போவோம் உள்ளே
(செல்கின்றனர்)

அதோ ....
ஆலவாய் அண்ணலாரை
அன்போடு வணங்கிநிற்கும்
கோலக் குலமகளார்.

மங்கையர்க்கரசியார் :- (வந்து காலில் விழுந்து வணங்குகிறார்)
நானும் என்பதியும் செய்த
நற்றவம் கைகூடிற்று
வாழ்ந்தனம் இனி நாம்.

திருஞானசம்பந்தர் :- சமணப் படுகுழியில்
வீழ்ந்துள்ள இந்நாட்டில்
சைவப் பணி புரியும்
தங்களைக் காணவந்தோம். - இனி
சிவநெறி விளங்கும் - இந்தத்
திருநாடு மீட்சி பெறும்

மங்கையர்க்கரசியார் :- (குலச் சிறையாரிடம்)
பக்குவமாய்த் தங்க வைத்துப்
பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
(அனைவரும் ஆலவாய் அண்ணலை
வணங்குகின்றனர்.)

ஒலிக்குரல் :- சமணர்கள் சூழ்ச்சி செய்தார்.
சதி செய்து கொல்லப் பார்த்தார்.

அடியவர் இருந்த அந்த
மடத்திற்கு நெருப்பு வைக்கக்
கொடியவர் முயன்றார்.
தீய.....
மந்திரம் ஜெபிப்போம் என்றார்.
மன்னனின் ஆணை பெற்றார்.

மந்திரம் பொய்த்த தாலே
மறைவாகச் சிலரை ஏவி
மடத்திற்குத் தீவைப் பித்தார்.

மகேசனின் அருளினாலே
அடியவர் அதில் தப்பித்தார்.

அடியவர் இருந்த அந்த
அழகிய மடத்தில் வைத்த

கொடிய தீ பாண்டி மன்னன்
உடலிலே வெப்பாயிற்று.

தன்வினை தன்னைச் சுடும்
என்பது தர்மம் அன்றோ

பாண்டியன் செய்தவினை
பாண்டியன் உடலுக்காச்சு

பாண்டியன் துடித்தான் - கூன்
பாண்டியன் துடித்தான்

## காட்சி 10

பாத்திரங்கள் :- பாண்டியன் நெடுமாறன் (கூன் பாண்டியன்), பாண்டிமாதேவி, குலச்சிறையார், சமணத் துறவிகள் சிலர்.

இடம் :- அரண்மனை

பாண்டியன் :- (வெப்பு நோயினால் துடிக்கிறான்)
ஐயோ! எரிக்கிறதே.... எரிக்கிறதே.
என்ன கொடுமை இது
வெப்புநோய் என்னைச் சுட்டு
வெதுப்புதே.

மருந்துகள் தாரும் - இந்த
நோயினைத் தீரும்
தாங்கவே முடியவில்லை
தாருங்கள் மருந்தை.

சமணர் : வைத்தியம் செய்கின்றோம் நாம்
வருந்திட வேண்டாம் மன்னா.

மயிற்பீலியால் தடவி
மந்திரம் செபித்து

கமண்டல நீர் தெளித்தால்
கடிதினில் நீங்கும் மன்னா.
(அப்படியே செய்கின்றனர்)

பாண்டியன் :- இல்லை.. இல்லை....
விடுங்கள் விடுங்கள்.
கொதிக்கிறதே. கொதிக்கிறதே.

உங்கள் மந்திரத்தால் - வெப்பம்
உடலெங்கும் பரவுகுதே.

அதிகரிக்கிறதே வெப்பம்.
அகலுங்கள் என்னைவிட்டு
ஐயோ! ஐயோ!
எனக்குற்ற இந்த நோயால்
என்னுயிர் போகும் முன்னர்
சுணக்கின்றித் தீர்ப்பார் யாவர்.
சொல்லுவீர்.

பாண்டிமாதேவி :- எம் மண்ணுக்கு வந்திருக்கும்
சம் பந்தப் பிள்ளைவந்தால்
நம் துன்பம் நீங்கும்

வெப்பு நோய் அகலும் - உங்கள்
வேதனைத் தீ விலகும்

பாண்டியன் :- அப்படி யாயின் அவரை
அழையுங்கள் விரைந்து
எப்படி யாயினும் என்
இந்த நோய் நீங்கவேண்டும்.

அப்பணி சடையான் தொண்டர்
அருளினால் இந்நோய் தீர்ந்தால்
அப்பொழு தேநான் சைவ
அருமறை தன்னை ஏற்பேன்.

இப்பொழு தேநீர் சென்று
இயம்பிடும் இந்தச் செய்தி.

அழையுங்கள் விரைந்து, அந்த
அருமறைக் குழந்தை தன்னை.

## காட்சி 11

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- திருஞானசம்பந்தர், பாண்டியன், பாண்டிமாதேவி, குலச்சிறையார், சிவனடியார்கள், சமணர்கள்.

பாண்டியன் :- எனக்குற்ற வெப்பு நோயை
எவர் மாற்று கின்றாரோ
அவர் நெறி சேர்வேன்.

சமணர் :- இடப்பாக வெப்பு நோயை
இப்பொழுதே நாம் தீர்ப்போம்
(மந்திரம் கூறி மயிற் பீலியால் தடவுகிறார்கள்)

பாண்டியன் :- ஐயோ... கொதிக்கிறதே... கொல்கிறதே
தாங்கவே முடியவில்லை.

திருஞானசம்பந்தர் :- நன்று! நன்று!
வலப்பாக வெப்பு நோயை - இந்த
மருந்தினால் யாமே தீர்ப்போம்.
எம் பெருமானே!
திரு நீறே மருந்து
திரு நீறே மருந்து
(திரு நீற்றை வலப்பாகம் பூசி
திருநீற்றுப்பதிகம் பாடுகிறார்)

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.**

பாண்டியன் :- ஆகா... ஆகா....
வலப்பாகம் குளிர்கிறது.
இடப்பாகம் இன்னும் எரிக்கிறதே.
விலகுங்கள் விலகுங்கள்
சமணர்களே! விலகுங்கள்.

சம்பந்தப் பிள்ளையாரே!
தாங்களே நோயைத் தீரும்.

திருஞானசம்பந்தர் :- திருநீற்றின் மேலாய்ஓர்
திரு மருந்தும் உளதாமோ
(திரு நீறு பூச நோய் குணமடைகிறது)

பாண்டியன் :- வெப்பு நோய் நீக்கிய
ஒப்பரும் குழந்தையே!
தங்கள் பாதமலர்
என் தலைக்கு அணியாகும்.
(பாண்டியன் திருஞான சம்பந்தரைப்
பணிந்து வணங்குகிறான்.)

சமணர் :- இது ஓர் மாயமாகும்.
இதனை நாம் ஏற்கமாட்டோம்.

அனல் வாதம் புனல்வாதம் செய்வோம்,
அவைகளினால் இவரை நாம் வெல்வோம்.

பாண்டியன் :- அறிவற்ற சமணர்களே
அடுத்தென்ன செய்ய வேண்டும்.

சமணர் :- எங்கள் சமய உண்மைகளை
ஏட்டில் எழுதி நாம்

எரி நெருப்பிலே இடுவோம்.
இவரும் அப்படியே செய்யட்டும்

எரியாத உண்மையே உண்மை.
அம் மதமே உண்மையென
அறிவியுங்கள்.

பாண்டியன் :- நல்லது. அப்படியே செய்வோம்.
வளருங்கள் தீயை.
(நெருப்பு மூட்டுகிறார்கள்.)

திருஞானசம்பந்தர் :- (தனது ஏட்டுச் சுவடிகளில் நூல்போட்டு ஒன்றை எடுத்தார். அது திரு நள்ளாற்றுப் பதிகம்)
சிவமே பரம் பொருள்
சைவமே உண்மைச் சமயம்
ஓம் நம சிவாய
சிவாய நம ஓம்
(அந்த ஏட்டை நெருப்பில் இடுகிறார்)

பாண்டியன் :- ஆச்சரியம் - ஆச்சரியம்
எரியவில்லையே
எடுங்கள் அதனை

திருஞானசம்பந்தர் :- (ஏட்டை எடுத்துக் காட்டுகிறார்)
கரியாகா இவ் ஏடே
கரியாகும். சாட்சியாகும்.
சிவனருளே பேரருள் ...!
சிவ பெருமானே கடவுள்.
சைவமே உண்மைச் சமயம்.
ஓம் நம சிவாய!
சிவாய நம ஓம்.

சமணர் :- இன்னும் இப்போட்டி முடியவில்லை.

பாண்டியன் :- சரி
எரியும் இந் நெருப்பில் - உங்கள்
ஏட்டினை இடுங்கள்

சமணர் :- (சமணர் தமது ஏட்டினை நெருப்பில் இடுகின்றனர். அது எரிந்து சாம்பலாயிற்று)
எரிந்து விட்டதே
எரிந்து விட்டதே

பாண்டியன் :- எடுங்கள் உங்கள் ஏட்டை.
என்ன தேடுகிறீர்கள் (சிரிப்பு)
(சமணர்கள் கிண்டிக்கிளறுகிறார்கள்)
உங்கள் ஏடு
எரிந்து கரியாகிச் சாம்பலாயிற்று
நீர் ஊற்றிக்
கரைத்துத்தான் எடுக்க வேண்டும். (சிரிப்பு)

உங்கள் பொய்ச் சமயம்
இங்கு இனி வேண்டாம்.
சைவமே மெய்ச் சமயம்
சிவமே மெய்ப் பரம்பொருள்.

சமணர் :- அரசே!
இன்னும் ஒரு போட்டி இருக்கிறதே.
அது தான் புனல் வாதம்.

ஆற்றிலே ஏட்டை இடுவோம். - அது
அள்ளுண்டால் தோற்றோம்
எதிர் சென்றால் வென்றோம்.

பாண்டியன் :- சரி! அதையும் தான் பார்ப்போமே
(அனைவரும் வைகை ஆற்றங்கரை
செல்கின்றனர்)

## காட்சி 12

இடம் :- வைகையாற்றங் கரை

பாத்திரங்கள் :- திருஞான சம்பந்தர், பாண்டிய மன்னன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், அடியார்கள், சமணர்.

பாண்டியன் :- பெருக்கெடுத்து ஓடும்.
பெரும் வைகை ஆற்றில்
இருக்கும் உங்கள் ஏட்டை
இடுங்கள்.

சமணர் :- (தமது ஏட்டை இடுகிறார்கள். அது அள்ளுண்டு செல்கிறது)
எங்கள் ஏடு நீரில்
இழுபட்டுப் போகிறதே.

பாண்டியன் :- செல்லட்டும் விடுங்கள்.
காலத்திற்கு ஒவ்வாதவை
காணாமற் போகட்டும் (சிரிப்பு)

திருஞானசம்பந்தர் :- ஓம் நமசிவாய
சிவாய நம ஓம்

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக.**
**ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமுந் துயர் தீர்கவே**

(பாடி விட்டு ஏட்டை ஆற்றில் இடுகிறார். அது எதிரேறிச் செல்கிறது)

பாண்டியன் :- ஏடு எதிரேறிச் செல்கிறது
எடுங்கள் ஏட்டை ....!
எடுங்கள் ஏட்டை ....!
என்ன அதிசயம் ...
என் கூன் நிமிர்ந்து விட்டதே.
என் கூன் நிமிர்ந்து விட்டதே.
(நிமிர்ந்து நிற்கிறான்)

குலச்சிறையார் :- இப்பொழுதே சென்று
அந்த ஏட்டை
இங்கெடுத்து வருகிறேன்.
(செல்கிறார். ஏட்டை எடுத்து வருகிறார்)

திருஞானசம்பந்தர் :- பாண்டிய மன்னா!
இனி தாங்கள்
கூன் பாண்டியனல்ல.
நின்ற சீர் நெடுமாறன்.

தங்கள் கூன் மட்டுமல்ல
பாண்டிய நாட்டின் கூனும்
நிமிர்ந்தது.

யாவரும் :- ஞானசம்பந்தப் பெருமான்
வாழ்க! வாழ்க!
சைவப் பெருநெறி
வாழ்க! வாழ்க!
சிவனருட் கருணை
வாழ்க! வாழ்க.!

(யாவரும் திருஞான சம்பந்தர் காலில் விழுந்து வணங்குகின்றார்கள். யாவருக்கும் அவர் திரு நீறு கொடுக்கிறார்.)

யாவரும் :- வாழ்க சைவம்
வாழ்க திருநீற்றின் மகிமை.
வாழ்க சிவனடியார் திருநெறி.

சிவம் - சுபம்

உ

# நாமார்க்குங் குடியல்லோம்

## (பா நாடகம்)

### காட்சி 1

இடம் :- திருவீரட்டானேஸ்வரர் கோவில்

பாத்திரங்கள் :- திருநாவுக்கரசர், திலகவதியார்.

(திருநாவுக்கரசர் சூலை நோயால் துடிக்கிறார்)

திருநாவுக்கரசர் :- ஆ, ஐயோ!... அம்மா!
என் உயிர் போகிறதே.
தாங்கிட முடியாத வேதனையில்
தவித்திடும் நிலையாச்சே.

குடலிலே தோன்றிப் புண்ணாக்கி - என்
உடலிலே ஒன்றிவிட்டது இந்நோய்.

ஆ... ஐயோ!... எனக்கு
இடர் செய்யும் இச்சூலை நோயை
எப்படி நான் மாற்றுவேன்.

ஆற்றாது அழுது அழுது
அவதியுறும் நிலையாச்சே.

ஊதி வீசும் பெரு நெருப்பில்
உருகி எரியும் மெழுகானேன்.

பாதி உயிர் போனதா? அன்றி
மீதியும் போனதா?

கூற்றுவனாய் வந்தென்னைக்
கொல்லுகின்ற இந்நோயை
மாற்றுதற்கு வழியுண்டா?

ஐயோ! அம்மா! அம்மா!
கடுமிருளில் கொடும்புலி வாய்க்
கன்றாகிக் கதறுகிறேன்.

கொடும்புயலில் சிதறுண்ட
குலமலர்போல் ஆகிவிட்டேன்.

எரிதழலில் எத்துண்ட புழுவோ - நான்
எத்தர்களால் இடறுண்ட எறும்போ.
ஆ... ஐயோ! அம்மா!

திலகவதியார் :- (அருகில் வந்து)
தம்பி! வருந்தாதே.
மருள் நீக்கியாரல்லவா நீ.
உன்னை
இருள் சூழ்ந்த தெப்படி.

பொய்யான சமயத்தை
மெய்யான தெனநம்பி
அஞ்ஞான இருள் புகுந்தாய்
அருஞ் சூலை நோய் விழுந்தாய்.

திருநாவுக்கரசர் :- அக்கா! - உங்கள்
அருமைத் தம்பியின்
அவல நிலை பாருங்கள்.

அன்னையாய் அத்தனாய்
அனைத்துமாய் இருந்தென்னை ஆதரித்த

அன்புத் தெய்வமே! - உங்கள்
அருமைத் தம்பியின்
அவல நிலை பாருங்கள்.

சூலைநோய் போக்கிச்
சுகம்காண வழியுண்டா.
ஆ.... ஐயோ! அம்மா! அம்மா!

திலகவதியார் :- தம்பி! உன்
மழலை மொழி கேட்டு
மனமகிழ்ந்த எனக்கு.......
மூச்சுவிட முடியாமல் - நீ
முனகுகின்ற நிலைபார்க்க
பேச்சே வரவில்லை.

தம்பி!
அக்கா! அக்கா! என்று
அழுவதால் ஆவதில்லை.

நோயாளி
மருத்துவனை நாடவேண்டும்.

திருநாவுக்கரசர் :- அக்கா!
சமணப் பள்ளியிலே ....
இல்லை இல்லை
சமணப் படுகுழியில் - என்
நோய்தீர்க்க மருந்தில்லை - இந்த
நோயை அறிந்தவராய்
எவருமில்லை அவ்விடத்தில்.

தாயோடு வாழக்
கொடுத்து வைக்காப் பாவிநான்
நோயோடு வாடுகிறேன்.

பாயோடு கிடந்து
பரிதவித்து இங்கு வந்தேன்.

வாயோடு புலம்பி
வலுவிழந்து நிற்கின்றேன்.

திலகவதியார் :- தம்பி!
அடியவரின் குறைதீர்க்கும்
அரனாரின் சந்நிதியில்
அழுது புலம்பு - உன்
அல்லலைக் கூறு.

வைத்தியர் களுக்கெல்லாம்
வைத்தியராய் விளங்குகின்ற
வைத்திய நாதரிடம்
வாய் விட்டுப் பேசு - உன்
வாய் நிறையப் பேசு - சூலை
நோய் மறையப் பேசு.

திருநாவுக்கரசர் :- ஆம்... ஆம்.. அதுதான் சரி
அப்படியே செய்கின்றேன்

திலகவதியார் :- பிறவிப் பிணி தீர்க்கும்
பெருமானுக்கு - உன் நோய்
பெரிதில்லைத் தம்பி.

திருவதிகை வீற்றிருக்கும்
திரு வீரட்டா னேசரிடம்
விண்ணப்பம் செய் தம்பி.

கூறு பெண்ணாய் வீற்றிருக்கும்
கோலக் கடவுளிடம்
கூறு உன் குறையை.

வீரட்டா னேஸ்வரரை - உன்
விழிகள் பார்க்கட்டும்.
கைகள் தொழட்டும்
வாய் வாழ்த்தட்டும்.
நெஞ்சம் நினைக்கட்டும்.
தலை தாழட்டும்.

இதோ ... இந்தா....
இந்தத் திருநீற்றை
இட்டுக்கொள் நெற்றியிலே.

உத்தமமாம் திருநீற்றை
உத்தூளன மாய் உன்
உடலெங்கும் பூசிக் கொள்
(திரு நீறு கொடுக்கிறார்)

திருநாவுக்கரசர் :- (வாங்கி நெற்றியிலும் உடலெங்கும் பூசுகிறார்)
இறைவா! பரம் பொருளே!
ஈஸ்வரனே!
அறியாமல் நான் செய்த
அரும்பிழைகள் பொறுத்தருளும்.

கூற்றுவனாய் வந்திருக்கும்
கொடுஞ்சூலை நோய் மாற்றி
ஏற்றென்னை அடியவனாய்
இப்புவியில் வாழவிடு.

ஆற்றாது அழுமெந்தன்
அவலநிலை பார்த்தபின்னும்
தேற்றாது விடுவாயோ
தெய்வமே சிவபிரானே.
(பாடுகிறார்...)

**கூற்றா யினவாறு விலக்க கிலீர் கொடுமைபல**
**செய்தன நான் அறியேன்**
**ஏற்றா யடிக்கே யிரவும் பகலும் பிரியாது**
**வணங்குவன் எப் பொழுதும்**
**தோற்றா தென் வயிற்றினகம் படியே**
**குடரோடு தொடக்கி முடக்கியிட**
**ஆற்றே னடியேன் அதிகைக் கெடில**
**வீரட்டானத் துறையம் மானே!**

(நோய் தீர்கிறது, மகிழ்ச்சியோடு)
ஆ... ஆ... நான் பாவியல்ல
சூலை நோய் தீர்ந்தது.

திருநீற்றின் மகிமையே மகிமை.
சிவ பெருமானின் பெருமையே பெருமை
அக்கா! அக்கா!

திலகவதியார் :- தம்பி! உன்
நோய் தீர்த்த சிவனை நீ
நொடிப் பொழுதும் மறவாதே.

திருவதிகைப் பதிவாழும்
திருவீரட் டானேஸ்வரரை
சித்தத்தில் நிலைநிறுத்தித்
தேவாரப் பண்பாடு.

கெடில நதிக் கரையிருக்கும்
கேடில்லாச் சிவனாரை,

வீரட்டா னேஸ்வரராய்
வீற்றிருக்கும் சிவனாரை,

பாராட்டிப் பண்பாடு
அதுவே நம் பண்பாடு.

திருநாவுக்கரசர் :- சமணப் படுகுழியில்
தடுமாறி விழுந்தேனே.

சைவத்தைப் பழித்து - அந்தச்
சமணத்தைப் புகழ்ந்தேனே

சைவத்தின் மகிமைதனைச்
சங்கரா மறந்தேனே.

திருநீற்றின் பெருமைதனைச்
சிந்திக்கா திருந்தேனே.

என்னைப் பிழை பொறுத்து
எனக்கின்று வாழ்வளித்தாய்.

இன்னும் உள நாட்கள்
ஈஸ்வரா உன் நாட்கள்.

இனி நான் சைவன்
சிவ நாமம் பாடுகின்ற
சிவனடியான்

ஓம்.. நம சிவாய.. ஓம்
சிவாய நம ஓம்.

## காட்சி 2

இடம் :- அரண்மனை

பாத்திரங்கள் :- மகேந்திர பல்லவன், அமைச்சர், சமணத்துறவிகள் சிலர்.

சமணத்துறவி 1 :- அரசே!
தரும சேனர் தம்
தமக்கையார் பால் சென்று

சைவத்தைப் பின்பற்றிச்
சமணத்தைப் பழிக்கின்றார்.

சமணத்துறவி 2 :- சூலைநோய் வந்ததெனச்
சூதாகப் பொய்சொல்லி

ஆலகண்டன் அடியவராய்
ஆகிவிட்டார் தருமசேனர்.

சமணத்துறவி 3 :- மந்திரத்தால் மாறாது
மருந்துகளால் மாறாது
தந்திரத்தால் மாறியதோ
சூலை நோய்.

அரசன் :- பொய்யாய் நடித்து,
பொருந்தாத நோய் சொல்லி

மெய்யாம் எம் சமயத்தின்
மேன்மைகளை அழித்திட்ட

தரும சேனரை - நாம்
தண்டித்திட வேண்டும்.

அமைச்சரே!
அழைத்துவாரும் அந்த
அறிவிலியை.

## காட்சி 3

இடம் :- திருவீரட்டானேஸ்வரர் ஆலய மண்டபம்

பாத்திரங்கள் :- திருநாவுக்கரசர், அமைச்சர், சேவகர்கள்

(திருநாவுக்கரசர் கோவிலில் வழிபட்டுக்
கொண்டிருக்கிறார். ஏனையோர்
வருகின்றனர்.)

அமைச்சர் :- தரும சேனரே! எங்கள்
தலைமைத் துறவியே!
சக்கர வர்த்தி
மகேந்திர பல்லவரின் ஆணை.
புறப்படும் அரண்மனைக்கு.

திருநாவுக்கரசர் :- ம்... (சிரித்தபடி)
தரும சேனரா? யார் அவர்?
தரும சேனர் இறந்து விட்டார்.
வருவதற்கு ஆளில்லை.

அமைச்சர் :- நன்று உம் பேச்சு
கொன்றுவிடுவான் மன்னன்.
மன்றுக்கு வாரும்.
வழக்குண்டு உம்மேலே.

திருநாவுக்கரசர் :- என்ன சொன்னீர்.
யார் மேல்? யார் வழக்கு.?

அமைச்சர் :- சூலைநோய் வந்ததென்று
சூதாகப் பொய் சொன்னீர்

திருநீற்றைப் பூசிச்
சிவனடியார் ஆனீரே
அதற்குத்தான் வழக்கு.

திருநாவுக்கரசர் :- என்ன சொன்னீர்?

உங்கள் வைத்தியத்தால்
மாறாத சூலை நோயை
எங்கள் சிவனாரின்
இன்னருளே மாற்றிற்று.

சிவத்தை மறந்திருந்தேன்,
திருநீற்றைத் துறந்திருந்தேன்,

இப்போது மெய் உணர்ந்தேன்
இணைந்துவிட்டேன் சைவத்தில்.

தாய் மதம் திரும்பியதால்
தலைநிமிர்ந்து நிற்கின்றேன்.

ஏமாற்றும் பொய்யும்
என்றும் எமக்கில்லை.

அமைச்சர் :- அரசனை அவமதித்தால்
அதன் விளைவு என்னாகும்.

முடிசூடி அரசாளும்
முடிமன்னர் தங்களுக்கு
குடிமக்கள் அடிமையன்றோ.

மறுக்காது வாரும்.
இல்லையேல்
இருக்காது உம்சிரம்.

திருநாவுக்கரசர் :- துறவிக்கு வேந்தன்
துரும்பென்று அறியீரோ.
என்
நெஞ்சத்தில் அஞ்செழுத்தே
நிறைந்திட்ட பின்னாலே

அஞ்சுவது யாதொன்றும் இல்லை - இனி
அஞ்ச வருவதும் இல்லை.
நாம் ஆர்க்கும் குடியல்லோம்.
(பாடுகிறார்)

**நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்**
**நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்.**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்.**
**இன்பமே எந்நாளும் துன்ப மில்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்**
**கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.**

எம்பெருமான் சிவபெருமானுக்கே
அல்லாமல்
நாம் ஆர்க்கும் குடியல்லோம்.
சென்று சொல்லும் மன்னனுக்கு.

சிவம் - சுபம்

உ

# நம்பி ஆரூரர்

(பா நாடகம்)

## காட்சி 1

இடம் :- திருமண மண்டபம்

பாத்திரங்கள் :- சுந்தரர் (நம்பியாரூரர், கிழப்பிராமணர், மணப்பெண், சடங்கவி சிவாச்சாரியார் (மணப்பெண்ணின் தந்தை), நரசிங்க முனையரையர் (சுந்தரரை வளர்த்த அரசன்), இரண்டு பிராமணர்கள், சபையோர்

(திருமணச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கிழப்பிராமணர் ஒரு பக்கத்தால் உள்ளே நுழைகின்றார். நரைமுடி, கையில் தண்டு, வெள்ளாடை, திருநீற்றுப் பூச்சு)

கிழப்பிராமணர் :- நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!

சுந்தரர் :- (எழுந்து கைகளை நீட்டி)
நெற்றிக் கண்ணுடைய
நிர்மலனை நினைவூட்டுங்
கற்றைச் சடையுடையீர்,
கரத்திலே தண்டு கொண்டீர்!

முற்றும் வெண்ணீறு,
முகத்திலே ஒளிதிகழச்
சற்றும் அகந்தையிலாச்
சாந்தம் தவழ் முகத்தீர்!

இற்றைக்கு இங்கே
எழுந்தருளப் பெற்றது,
யான் ....
அற்றைப் பிறப்பில்செய்
அருந்தவத்தின் பயன்தானோ?

பெரியவரே! பெரிதுவந்து வரவேற்றேன்
எழுந்தருள்க இங்கே.
(ஆசனத்தைக் காட்டுகிறார்)

நரசிங்க
முனையரையர் :- ஆற்று நுரை போன்ற
அழகிய வெண் நரை.
போற்றுந் திரு நீற்றால்
பொன்னுடலைப் புனிதாக்கி
சாற்றும் வெண்துகிலைத்
தரித்துத் தண்டேந்தி
ஏற்றதோர் பொழுது வந்து எய்தினீர்
பெரியவரே!
வருக! அமர்க!

சடங்கவி
சிவாச்சாரியார் :- மணவிழா நடக்கும் நேரம்
மன்றுக்கு வந்துள்ள
இணையிலாப் பெரியோய்!
இங்கே எழுந்தருள்க.

வாழப்போகும் இந்த
வாழைக் குருத்துக்களை
வாழ்த்துங்கள் நன்றாய்.
வளமாக வாழட்டும்

கிழப்பிராமணர் :- வாழ்த்துவது இருக்கட்டும்
வழக்குண்டு இவனோடு.

வாக்குறுதி தனைமறந்து
மணக்கோலம் பூண்ட இது
யார்க்குறுதி தேடியோ?

மணமகனே ஆரூரா!
இது செய்தல் தகுந் தானா?
என் வழக்கின் பின்பே
இது செய்தல் தகும் அன்றி
மன் வழக்கம் இது வென்று
மண வாழ்க்கை தொடங்கு கின்ற
நின் வழக்கம் நல்ல தல்ல.

நினைத்துப் பார் நடந்தவையை
நீசெய்தல் தகுஞ் செயலா?

சுந்தரர் :- வழக்கா? எனக்கா?
அப்படி ஏதும் உண்டேல்
அதற்குமுன் நானோ வீணே
இப்படிக் கோலம் பூண்பேன்.
இதயத்தில் எதை நினைத்தீர்.

செப்படி வித்தை காட்டும்
செயலுக்கா வந்து சேர்ந்தீர்.
(கோபமாக)
ம்.... கூறுங்கள்

உம் வழக்கை முடியாது
இம் மணத்தை யான்முடியேன்.

கிழப்பிராமணர் :- (புன்னகையோடு)
ம்... ம்...
நீ... என் அடிமை - நீ
என் ஏவல் புரிவதன்றி
இந்தப்
பெண்ஏவல் புரிவதென்றும்
பொருந்தாது அதை உணர்க.

சுந்தரர் :- (பெரிதாகச் சிரித்து விட்டு)
அடிமை யாருக்கு யார் அடிமை

பித்துப் பிடித்தவர்போல்
பிதற்றுகின்ற பெரியவரே!

அந்தணர் யாரும், யார்க்கும்
அடிமையாய் ஆதல் இல்லை.

இந்த இவ் வுலகில் எங்கும்
இருந்த தாய்ச் சான்றும் இல்லை.

ஆசில் அந்தணர்கள் வேறோர்
அந்தணர்க்கு அடிமை ஆதல்
பேசஇன்று உன்னைக் கேட்டோம்
பித்தனோ மறையோன்.

கிழப்பிராமணர் :- நன்று. நன்று.
பேசு.... பேசு.
(சிரிக்கிறார்)

சுந்தரர் :- அங்கமெல்லாம் நரைவிழுந்தும்
அறிவிலியாய் இருக்கின்றீர்.

தண்டு கொண்டு நடந்துவந்து - என்னைத்
தொண்டு கொள்ளத் துடிக்கிறீரே.
கண்டு கொள்ளும் என்வார்த்தை
காதைச் சரிசெய்யும்.

நானோர் அந்தணன். ஆதி சைவன்.
நான் யார்க்கும் அடிமை இல்லை

பெரியவரே!
பித்துப் பிடித்ததோ? பிதற்றாதீர்.

கிழப்பிராமணர் :- அப்பனே!
கத்திப் பேசினால்
சத்தியம் பொய்க்குமோ.
பித்தன் நானென்றால் ஆகட்டும்.
அன்றியும்
பேயன் நானென்றால் அதுவும் ஆகட்டும்.

இத்தனை நாள் உன்னை
ஏவல் கொள்ளாது இருந்த நான்
பித்தன் தான் - அன்றியும்

அடிமையோடு இச்சபையில்
அதிவாதம் புரிகின்ற
பேயனும் ஆகுவன்யான்.

எது எப்படி இருப்பினும்
இது இப்படி ஆகவேண்டும்.

நீ என் அடிமை.
என் ஏவல் புரிவதற்கு
இப்போதே புறப்படு.

சுந்தரர் :- சபையோரே! பெரியோரே!
எத்தகை அநீதி இது.

அவைக்குதவாக் கதைபிதற்றும்
அறிவிலியின் வார்த்தையிலே
எதைக் கண்டீர். ஏன் மௌனம்.

பிறந்தநாள் தொடங்கி இங்கே
பேசும் இந் நாள் வரைக்கும்
எவர்க்கும் நான் அடிமையாக
இருந்ததும் உண்டோ.

சபையிலே வந்து நின்று
சத்திய வான்போல் சொன்னால்
எவையுமே மெய்த்திடுமோ.
என்வாழ்வு பொய்த்திடுமோ.

சபையிலுள்ளஒருவர் :- பெரியவரே!
ஆரூரனாம் இவரை அடிமை என்றும்
அத்தொழில் புரிகவென்றும்
அழைக்கின்றீர்.
அதற்கான ஏதேனும்
அத்தாட்சி உண்டா?

கிழப்பிராமணர் :- ஆம் - ஆம். இல்லாமலா.....
இவன் மட்டுமென்ன, இவனது
பரம்பரையே எனக்கு அடிமை.

அத்தாட்சி இல்லாமல் அழைப்பேனா?
அடிமைச் சீட்டு, இங்கே இருக்கிறது.
(கையில் ஓலை வைத்திருக்கிறார்)

பித்தனென்று என்னைப்
பேசிடும் இவனின் முன்னே
பித்தனாய் ஆகிடவோ
பெருஞ்சபைக்கு வந்தேன் யான்.
எத்தனாய் விட்டான் இவன்

எத்தனை பிறவிகளில்
எனக்கடிமை செய்தவன்.
அத்தனையும் பொய்யென்று
அகன்றுவிடப் பார்க்கின்றான்.
விடுவேனா?

என் அடிமை இவன்
இவனை நான் நன்கறிவேன்
குற்றமாய்ச் சொல்லேன்
குடி குடி ஆட்கொண்டேன்.

சுந்தரர் :- (கோபமாக)
அடிமை ஓலை
அப்படியும் ஒன்றா?
பழைய மன்றாடி போலும்
(சிரிக்கிறார்)

பொய்... பொய்.
சுத்தப் பொய்.
சத்தியம் எது வென்று
இப்போது காட்டுகிறேன்.

வித்தகன் போல் வந்து
வீண்வழக்குத் தொடுத்து
விழலுக்கு நீரிறைக்கும் வீரரே!
எங்கே அந்த ஓலை.

எடும் பார்ப்போம்.
காட்டும் அந்த ஓலையை.

கிழப்பிராமணர் :- அடிமை நீ: உன் ஆண்டவன் நான்.
அவ்வோலை பார்ப்பதற்கு
அருகதை உனக்கில்லை.

என்னிடம்
கைகட்டி வேலைசெய்யும் அடிமை,
கைநீட்டி, ஓலைவாங்கத் தகுதியோ.
கொடேன் உன்னிடம்.
(சுந்தரர் பறிக்க முயல சபைக்குள் செல்கிறார்
கிழப்பிராமணர். சுந்தரர் ஓலையைப் பறித்துக்
கிழித்தெறிகிறார்)

முறையோ! இது முறையோ!
மன்றுக்கு வந்தஎன்
மானந் தனைப் பறித்தாய்.

ஓலையா நீ கிழித்தாய்
இல்லை இல்லை
உண்மையின், ஒழுக்கத்தின்
காலைக் கிழித்தாய்.

ஓலையைக் கிழித்தால் மட்டும்
ஓடுமோ முறைமை எங்கும்.
உண்மைக்கு ஆதாரம்
ஓலையைக் கிழித்ததுவே.

இவன் என் அடிமை.
அல்லாது போனால் - என் ஓலை

செல்லாது போம் படிக்குக்
கிழிப்பானேன்.

அப்போதே அஞ்சினேன்.
இப்போது செயலற்றேன்.
தப்பேதும் நானறியேன்
சங்கரா எது நீதி.

சபையோரில் ஒருவர் :- முறையில்லா முறைதன்னை
முறையாக்க முயன்றுள்ள
முறையில்லா முதியவரே!
முறையாகக் கூறும்
எங்கே உம் இருப்பிடம்

கிழப்பிராமணர் :- இங்கு தான். அண்மையில் தான்.
அருமறைகள் வளர்க்கின்ற
திருமுனிகள் வாழுமிடம்.

அரோகரா ஒலிஎழுப்பும்
அடியவர்கள் ஆளுமிடம்.

திருவெண்ணெய் நல்லூர்தான்.
அது நிற்க.......
ஓலையைக் கிழித்ததற்கு
ஒருவரோ இருவர் அல்ல
ஊரெல்லாம் சாட்சி
ஊரெல்லாம் சாட்சி.

சுந்தரர் :- (அமைதியாக)
வெண்ணெய்நல் லூர்தன்னில்
விரும்பிநீர் உறைவீர் ஆயின் - நீர்

எண்ணிய முடிப்பதற்கு
எழுந்தங்கு சென்றுநின்று
திண்ணமாய் ஆடும் - இந்தத்
தீநெறி வழக்கை.

கிழப்பிராமணர் :- திருவெண்ணெய் நல்லூர் அன்றி
ஒருவேறு சபையே யேனும்

புனிதநான் மறையோர் முன்னர் போயினும்
புரிவன்யான் என் வழக்கை.

நீ எது புரிந்தாலும் தான்
நான் உன்னை அடிமை ஆக்கி
ஆண்டுகொண் டன்றி வேறு
அகலேன் யான்.
அறிந்து கொள்க.

## காட்சி 2

இடம் :- நீதி மன்று. மூன்று பேர் நீதிபதிகளாக
அமர்ந்திருக்கிறார்கள்.

பாத்திரங்கள் :- சுந்தரர், கிழப்பிராமணர், நீதிபதிகள்,
சபையோர்

கிழப்பிராமணர் :- (சபை முன் நின்று கொண்டு)
ஆரூரன் இவன். என் அடிமை
காட்டிய அடிமைச் சான்றைக்
கைப்பற்றிக் கிழித்துப் போட்டான்.

வாதலால் உண்மை தோன்றாது
என்பர் முன்னோர்கள்.

ஆதலால் உம்முன் வந்தேன்.
இது எந்தன் வழக்கு.

நீதிபதி 1 :- ஆருரரே!
இதற்கென்ன பதில்

ஆருரர் :- நான் ஆதி சைவன் - யாவரும்
அறிய நான் ஓர் அந்தணன்
அந்தணன் அடிமை ஆதல்
அருமறை வழக்கிலுண்டோ.

நீதிபதி 2 :- மறையவர் அடிமை ஆதல்
மாநிலந் தன்னில் இல்லை.
முறையல சொன்னீர் ஐயா!
முன்னென்றும் கண்டதில்லை.

கிழப்பிராமணர் :- வழி வழியாய் வருவதன்றோ வழக்கு -
இவன்
வழிவந்த ஓலையைத்தான் வைத்திருந்தேன்
கிழித்து விட்டான் -
இவன் தன் ....
தந்தையின் தந்தை தந்த
சான்றோலை அது தான்.

விருப்பினால் இவன்தன் பாட்டன்
விதிப்படி எழுதித் தந்தென்
இருப்பிலே இருந்த ஓலை
இதோ என்று காட்டவந்தால்
இழுத் தெடுத்துக்
கிழிப்பது வழக்கோ - உலகம்
பழிப்பதும் இலையோ.

நீதிபதி 3 :- ஆரூரரே! இவர் உம்மை
அடிமை என்று நிரூபித்தால்.

சுந்தரர் :- அனைத்து நூல் உணர்ந்தீர்
ஆதி ...
சைவன் என்று அறிவீர் -
என்னைத் ....
தனக்கு ஓர் அடிமை என்று இவ்
அந்தணர் சாதித்தாரேல்
எனக்கு என் சொல்லலாகும்.
இது பெரும் மாயையாகும்.

கணக்கு இது விதியென்றன்றோ
கருதலாம்.

நீதிபதி 1 :- பெரியவரே!
அடிமை இவன் என்று
அழுத்தமாய்ச் சொல்லுகின்றீர்.
அதனை நீர் சொல்லால் அன்றி
அத்தாட்சிப் படுத்த வேண்டும்.

ஆட்சியில், ஆவணத்தில்,
அன்றி மற்று அயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று
காட்டினால் நம்புவோம் யாம்.

கிழப்பிராமணர் :- நன்று ... நன்று (சிரிப்பு)
முன் இவன் கிழித்ததும்
மூல ஓலையே அல்ல
மூல ஓலை கைதனில் உண்டு

கிழிப்பான் என்றே
படியோலை காட்டிப் பார்த்தேன் - அப்
படியேதான் கிழித்தும் விட்டான்.
என் அடிமை பற்றி எனக்கா தெரியாது.

ஒரு தலை அன்றி - நீதி
ஒழுங்குடன் சொல்வீர் ஆயின்
கெடுதலை அறியா யானும்
காட்டுவன் மூல ஓலை.

நீதிபதி 2 :- நீதி வழுவா நெறிமுறையில் மன்றமைத்தோம்
தீதினால் ஏதேனுஞ் செய்தறியோம்.
காட்டுக நீர்.
(ஓலையைக் கிழப் பிராமணர் மடியிலிருந்து எடுத்து நீட்ட நீதிபதி வாசிக்கிறார்)

**அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை**
**பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப் பித்தர்க்கு யானும் என்பால்**
**வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை**
**இருமையல் எழுதி நேர்ந்தேன். இதற்கிவை என் எழுத்து.**

ஆம்... ஆம்.
சாட்சிக் கையெழுத்தெல்லாம்
சரியாய்த்தான் இருக்கிறது.
(மற்றவர்களுக்கும் காட்டி யோசிக்கிறார்)
ம்... ம்...
இன்னும் ஒன்றுண்டு
ஆரூர!..... இவை
உம் தந்தையின் தந்தையார் தம்
கையெழுத்துத் தானா என்று
கவனமாய்ப் பார்த்துச் சொல்லும்.

கிழப்பிராமணர் :- (கோபமாக)
இன்னும் இவனோ இவ்வோலை காண்பான்?
முன்னும் கிழித்த முறைமறந்து போனீரோ?

பாட்டனின் எழுத்து வேறு
பார்ப்பதற்கு உண்டாம் ஆயின்
காட்டுக. ஒப்பு நோக்கிக்
காணட்டும் இந்த மன்று.

அது அமையும் அன்றி
அடிமையாம் இவன்தன் சாட்சி
அடுக்குமோ. என்ன நீதி.

நீதிபதி 3 :- ஆம்.. ஆம்.. அதுதான் சரி!
அப்படியே செய்வோம்.
(பாட்டனின் கையெழுத்து தருவிக்கப்பட்டு
ஒத்துப் பார்க்கப் படுகின்றது)
இரண்டும் ஒத்திருக்கின்றன
இனிச் சொல்ல ஒன்றும் இல்லை.

நான்மறை முனிவனார்க்கு
நம்பி ஆரூரர் தோற்றீர்
பான்மையில் ஏவல் செய்தல் பணி.

சுந்தரர் :- விதிமுறை இதுவே யாகில்
யான் - இதற்கு
இசையேன் என்னல் இசையுமோ
இன்றே இசைந்தேன்.

நீதிபதி 1 :- ஆவணந் தன்னில் உம் ஊர்
இவ்வூராய் இருக்கக் கண்டோம்.

ஆயின் உம்
திருமிகு இல்லம் எங்கே செப்புக.

கிழப்பிராமணர் :- என்னை...
ஒருவரும் அறியீர் ஆயின்
என் பின்னே வருக.
(யாவரும் செல்கின்றனர்)

## காட்சி 3

இடம் :- கோயில்

பாத்திரங்கள் :- சுந்தரர், கிழப்பிராமணர், நீதிபதிகள், சபையோர்

(கிழப்பிராமணர் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவன் கோவிலுக்கு அழைத்துச் செல்கின்றார்)

நீதிபதி 1 :- எங்கள்
தம்பிரான் கோயில் புக்கது ஏன்.
(பிராமணர் மறைகிறார்)

சுந்தரர் :- (சிவபெருமானை இடப வாகனத்தில் கண்டு கைகூப்பி வணங்குகிறார்)
மன்றுளீர் செயலோ - என்னை
வலிய ஆட்கொண்ட செய்கை.

என்றும் உன் அடிமையாகும்.
இன்பத்தை மறந்து போனேன்.
நன்றிதை அறியாப் பாவி
நாயினுஞ் சிறியேன் ஆகி

அன்றுநான் வாதில் நின்றேன்
அவதூறு பலவுஞ் சொன்னேன்.

அடியவன் எனை ஆட்கொண்டு
அரியநற் காட்சி தந்தாய்.

சிவபெருமான் :- (அசரீரியாக)
மற்று நீ வன்மை பேசி
**வன்தொண்டன்** என்னும் நாமம் பெற்றனை,

நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக.

சுந்தரர் :- வேதியன் ஆகி என்னை
வழக்கினால் வெல்ல வந்த
ஊதியம் அறியாதேனுக்கு
உணர்வுதந்து உய்யக் கொண்ட
கோதிலா அமுதே! - என்றுங்
குறைவிலா நிறைவே - இன்றுன்
குணப்பெருங் கடலை
நாயேன்....
யாதினை அறிந்து
என்சொல்லிப் பாடுகேன்.

சிவபெருமான் :- முன்பெனை நீ
பித்தன் என்றே பேசினை.
ஆதலால் - என்னைப்
**பித்தா** என்றெடுத்துப்
பிழையறப் பாடுக.

சுந்தரர் :- (பாடுகிறார்)

**பித்தாப் பிறைசூடிப் பெருமானே**
**அருளாளா!**
**எத்தால் மறவாதே நினைக்கின்றேன்**
**மனத்துன்னை.**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்**
**நல்லூர் அருட்துறையில்**
**அத்தா உனக் காளாய் இனி**
**அல்லேன் எனலாமோ.**

சிவம் - சுபம்

# பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்

(பா நாடகம்)

## காட்சி 1

இடம் :- கோயில்

பாத்திரங்கள் :- செம்மனச் செல்வி

செம்மனச் செல்வி :- (கோயிலிலே வணங்கியபடி முறையிடுகிறார்)

அப்பனே! சோமசுந்தரப் பெருமானே!
அடியனேன் குறைதீர்த்து
ஆதரிக்க மாட்டாயா.

இப்புவியில் உனையன்றி
எனக்கேதும் துணையில்லை.
தப்பேதுஞ் செய்தேனோ
தவிக்கஏன் விட்டுவிட்டாய்.

பொங்கிப் பெருகி வந்த
வைகைக் கரை தனில் - என்
பங்கை அடைப் பதற்குப்
பாவியான் என்ன செய்வேன்.

திங்கள் தனைச் சூடும்
சங்கரனே - நீ யன்றி
எங்கள் குறை தீர்க்க
எங்கிருந்து யார் வருவார்.
(கோயிலிலிருந்து திரும்பி நடந்து வந்து வீட்டினுள் இருக்கிறாள்.)

## காட்சி 2

இடம் :- வீடு

பாத்திரங்கள் :- கூலியாள் (சிவபெருமான்), செம்மனச் செல்வி.

(வீதியில் ஒரு கூலியாள் கூடையும் மண்வெட்டியும் கொண்டு வருகிறான். அதைப்பார்த்து)

செம்மனச் செல்வி :- மகனே இங்கு சற்றே வந்திடுக
உன்னை இங்கே.......
சிவனே தான் அனுப்பி
வைத்தாரோ!

கூலியாள் :- பாட்டி!
ஏனழைத்தாய் என்னை.
ஏதாச்சும் வேலையுண்டா?

கூலிக்கு வேலை செய்வேன்,
கூடையும் மண்வெட்டியும்
கொண்டு வந்தேன்

இங்கே பார்.... (சிரிப்புடன்)
உனக்கும் உதவும்.

செம்மனச்செல்வி :- கேலிக்கு நேரமில்லைக்
கேள்தம்பி சொல்லுகிறேன்.

ஆற்றுப் பெருக்கை
அணைகட்ட ஆள் வேண்டும்.

காற்றுச் சிறிதடித்தால்
கால் தடுக்கும் வயதெனக்கு.
ஆற்றுப் பெருக்கிற்கு
அணை போட என்செய்வேன்.

நேற்று முதல்ச் சிவனை
நினை யாத நேரமில்லை.

வைகை தனை அடைக்கும்
செய்கை தனைச் செய்ய
வகை யறியாது நின்று
வாடு கின்றேன். தம்பி

மகனே! என் பங்கைநீ
மண் போட்டு அடைப்பாயா.

கூலியாள் :- பாட்டி!
கூலியாள் நான்,
குடும்பமோ மிகப் பெரிது.
முற் கூலி தந்தாயேல்
முடித் திடுவேன் வேலைகளை.

செம்மனச் செல்வி :- இப்போது வேண்டு மென்றால்
இனிய பிட்டுத் தருகின்றேன்.

சற்றுப் பொறு மகனே.
நான் இதனை
விற்றுப் பணம் ஆக்கிய பின்

மாலையிலே நான் உனக்குக்
கூலியினைத் தந்திடு வேன்

கூலியாள் :- சரி, சரி, எங்கே! ....
பசியோ தாங்கவில்லை
பார்ப்போம் உன் பிட்டதனை
(செம்மனச் செல்வி பிட்டுப் போட்டுக்
கொடுக்கிறாள்)

கூலியாள் :- கிள்ளி வைக்க வேண்டாம் பாட்டி
அள்ளி நிறைய அடுக்குங்கள்.
கொள்ளி வைக்கக் கூட ஒரு
பிள்ளை யில்லை உங்களுக்கு.....
பின் ஏன் தயக்கம்.

செம்மனச் செல்வி :- எள்ளி நகை செய்யாதே! ....
துள்ளித் திரிகின்ற பருவம் உனக்கு,
வெள்ளி நரை தோன்றி
விழும் பருவம் எனக்கு.

காவோலை விழும் போது
குருத்தோலை சிரிக்கிறது.

கூலியாள் :- (சாப்பிட்டபடி)
ஆகா... ஆகா...
அருமை, அருமை,
அருமையிலும் அருமை
ருசியான பிட்டுத்தான்.

இன்னும் கொஞ்சம்
இடுங்களேன் இலையில்.

செம்மனச் செல்வி :- (பிட்டு வைக்கிறாள்)
நன்றாகச் சாப்பிடு
நானுனக்குத் தாய்போல.

கூலியாள் :- வேடன் இட்ட
ஊனிலும் இனிது பாட்டி,
போடன் இலையில்
பெரிதும் இனிக்கிறது.

செம்மனச் செல்வி :- ஊனும் உண்பாயோ..

கூலியாள் :- அன்போடு தந்தால்
அமுதாகும் விஷம் எனக்கு.
ம்.. ம்.. (தலையசைத்து)

பாட்டி!
பிட்டுச் சிறிதே கையில்
கட்டித் தந்தால் என்ன,
கட்டு வேலை செய்து
களைத்த போது வாயில்
இட்டுத் தின்ன லாமே.
(செம்மனச் செல்வி பிட்டை
கூலியாளின் துணியில் கொட்டுகிறாள்.
கூலியாள் அதை முடிந்து கொள்கிறார்)

கூலியாள் :- கவலையை விடுதாயே
காரியத்தை முடித்திடுவேன்.
கட்டி முடித்துக்
காப்பதுதான் என் வேலை.

செம்மனச்செல்வி :- வா தம்பி போவோம்.
வைகைக் கரை சேர்வோம்
(இருவரும் எழுந்து நடக்கின்றனர்)

## காட்சி 3

இடம் :- வைகைக்கரை

பாத்திரங்கள் :- கூலியாள் (சிவபெருமான்), செம்மனச் செல்வி

கூலியாள் :- வைகை பெருகிய தால்
வழிகளையும் காணவில்லை.

செம்மனச்செல்வி :- இதோ.. இதுதான் என்பங்கு
இதனை நீ கட்ட வேண்டும்.

கூலியாள் :- ஓம்... ஓம்...
இது எனக்குச் சிறுவேலை.

நொடிப் பொழுதில் ....
கட்டி முடித்துப் பின்
களைப்போடு வந்திடுவேன்.

கூலியொடு......
பிட்டும் வைத்திருங்கள்.
பெரும் பசிக்கு அது உதவும்.

நீங்கள் சென்று
பிட்டை அவியுங்கள்
ம்... ம்.... செல்லுங்கள்
யாவற்றையும்
கட்டிக் காப்பதுதான் என்வேலை
(செம்மனச்செல்வி செல்கிறார்)

(கூலியாள் அணைகட்டும் காட்சி, விளையாட்டாக மண்ணை வெட்டுவதும், கூடையில் போட்டுச் சுமந்து கொண்டு போய் கொட்டுவதும், பாய்ந்து விளையாடுவதும், பின் கூடையைத் தலைக்கு வைத்து கொன்றை மர நிழலில் நித்திரை செய்வதும்.)

## காட்சி 4

இடம் :- வைகைக் கரை

பாத்திரங்கள் :- கூலியாள் (சிவபெருமான்), அரசன், காரியதரிசி, சேவகன்
(அரசன், காரியதரிசி, சேவகன் ஆகியோர் வந்து ஒவ்வொன்றாகப் பார்க்கின்றனர். கூலியாள் கொன்றை மர நிழலில் கூடையை தலைக்கு வைத்து நித்திரை செய்கின்றான்.)

அரசன் :- ஒவ்வொருவர் வேலையும்
ஒழுங்காக இருக்கின்றது.
அணைகட்டி முடித்து விட்டால்
அபாயம் இனி ஏதுமில்லை.

அதோ!.... அங்கே.
கட்டாத கரை யுண்டு...
அது யார் பங்கு....

காரியதரிசி :- செம்மனச் செல்வி என்பாள்
சிறந்த ஓர் பக்தை - அன்னாள்
பங்கு தான் அந்தக் கரை.

பாவி ஓர் கூலியாளாய்.......
அக்கரை அடைக்க வந்தான்
அக்கறை சிறிதும் இல்லை.

பிட்டினை உண்பான் நன்றாய்.
பின்னொரு சிறிது நேரம்
வெட்டுவான் மண்ணை,

அங்கே ....
விளையாடிப் பொழுது போக்கிக்
கொட்டுவான் கரையில்
பின்பு....
கூடையைத் தலைக்கு வைத்துக்
கொள்ளுவான் நித்திரையை.

அரசன் :- அழைத்து வாருங்கள் - அந்த
அற்பனை அடிக்க வேண்டும்.
வேலையைச் செய்ய வந்தால்
விளையாட்டு எதற்கு இங்கே.

சேவகன் :- (செல்கிறான்)
நித்திரையா கொள்ளுகிறாய்
நீசனே வா!. உன்னை
இத் தரையின் மன்னன்
இழுத்துவர ஆணையிட்டான்.

கூடை தலைக்கு வைத்துக்
கொன்றைமரக் குளிர் நிழலில்
ஆடை தனை விரித்து
ஆழ்ந்து விட்டாய் நித்திரையில்.

காடைப் பயலே... ம்...
எழுந்து வா என்னோடு.
(இழுத்து வருகிறான். கூலியாள் பயந்து பயந்து வருகிறான்.)

அரசன் :- அணைகட்ட வந்து விட்டு
அயர்ந்து போய்த் தூங்குகிறாய்,

சும்மா உனை விட்டால்
சோம்பல் மிகுத்து விடும்.

சேவகா!...
அடி இவன் முதுகில் நன்றாய்
அப்போது புத்தி வரும்
தடி இதோ... ம்...
தண்டனையை நிறைவேற்று

(சேவகன் அடிக்கிறான். கூலியாள் மறைகிறான். எல்லோரும் தம்மில் அடிபட்டதாகத் துடிக்கின்றனர்)

ஒலிக்குரல் :- அண்ட சராசரம்
எங்கும் விழுந்தது
அவன் அங்கு
அடித்த அடி
எங்கும் நிறைந்தவர்
எம் பெருமான் என்னும்
எண்ணம் நிறைந்ததுவே.

சிவம் - சுபம்

# அகளங்கன் அவர்கள் எழுதிய நூல்கள்

1) "செல்" "வா" என்று ஆணையிடாய் (அஞ்சலிக் கவிதை-1977)
2) சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்,-1982)
3) சமவெளி மலைகள் (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்-1985)
4) வாலி (ஆய்வு நூல்.மூன்று பதிப்புகள்.1987, 1989, 2006- இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ்- 1987)
5) இலக்கியத் தேறல் (கட்டுரைகள்-1988)
6) நளவெண்பா (கதை-1989)
7) அன்றில் பறவைகள் (நாடகங்கள், 1992-தேசிய சாகித்திய மண்டலப் பரிசு- 1992)
8) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு-1992)
9) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் - இருபதிப்புக்கள் - 1992, 1993)
10) தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்-1993)
11) பன்னிரு திருமுறை அறிமுகம் (சமயம்-1994)
12) மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு-1994)
13) இலக்கிய நாடகங்கள். (நாடகங்கள்,-1994, வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு-1994)
14) ஆத்தி சூடி (விளக்கவுரை-1995)
15) கொன்றை வேந்தன் (விளக்கவுரை-1996)
16) அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்-1996, வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு-1996)
17) வாக்குண்டாம் (மூதுரை - விளக்கவுரை-1997)
18) சிவபுராணம் (பொருளுரை-1997)
19) செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்- இரு பதிப்புக்கள் 1997, 2015)
20) நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புக்கள்- இரு பதிப்புக்கள், 1997, 2008.)
21) நல்வழி (பொழிப்புரை -விளக்கவுரை-1998)
22) இசைப்பாமாலை (இசைப் பாடல்கள்-1998)
23) கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு (ஆய்வு-1999)
24) இலக்கியச் சரம் (கட்டுரைகள்- 2000)
25) வெற்றி வேற்கை (நறுந்தொகை - உரை-2000)
26) கூவாத குயில்கள் (நாடகங்கள்-2001)
27) திருவெம்பாவை உரை (சமயம்-2002)

28) பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003)
29) சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்-2003)
30) சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்-2005)
31) நறுந் தமிழ் (கட்டுரைகள்-2006)
32) பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு-2007)
33) பத்தினித் தெய்வம்(நாட்டிய நாடகங்கள்-2008-வடமாகாண சாகித்திய மண்டலப் பரிசு 2008)
34) வேரும் விழுதும் (கட்டுரைகள்-2008, வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு 2008)
35) கங்கையின் மைந்தன் (நாடகங்கள் - 2009, வட மாகாண சாகித்திய மண்டலப் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு, தமிழியல் விருது, தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ், இலங்கை இலக்கியப்பேரவை விருது-.2009)
36) பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்-2010)
37) சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்-2010)
38) சகல கலா வல்லிமாலை-(உரையுடன்-2011)
39) அலைக்குமிழ் (நாவல்-2011,கொடகே தேசிய சாகித்திய சான்றிதழ். இலங்கை இலக்கியப் பேரவையின் சான்றிதழ். தேசிய சாகித்திய மண்டல சான்றிதழ். தமிழியல் விருது-2011)
40) சின்னஞ் சிறிய சிறகுகள். (குழந்தைப் பாடல்-2012, தேசிய சாகித்ய மண்டலப் பரிசு, வடமாகாண சிறந்த சிறுவர் இலக்கியப் பரிசு, தமிழியல் விருது.-2012.)
41) கம்பனில் நான். (கட்டுரைகள். 2013.)
42) முற்றத்துக் கரடி (சிறுகதைகள்-2014- தமிழ்நாடு திருப்பூர்.கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவுப் பரிசு- 2014)
43) தமிழ்த் தூது. வண. பிதா. தனிநாயகம் அடிகளார். (சிறு குறிப்புக்கள் -2014)
44) வன்னிப் பிரதேச வயற் பண்பாடு.( ஆய்வு- 2014, வடமாகாண சிறந்த நூற்பரிசு,தமிழியல் விருது-2014, கொழும்புக் கம்பன் கழகம் நுழைபுலம் ஆய்வுவிருது - 2017)
45) ஞானப்பழம் (பாநாடகம்)
46) ஆனைகட்டிய அரியாத்தை (நாடகம்) - அச்சில்



# “மூதறிஞ! உன் அகவை நூறதாக!”

மரபுவழித் தமிழ்அதனின் மாண்பைக் கற்று
மகத்தான நூல்கள்பல மண்ணுக் கீந்தாய்
தரமிகுந்த உரைகள்பல செய்து நல்ல
தனிச்சபைகள் பலவற்றில் வெற்றி கொண்டாய்
உரமிகுந்த கற்பித்தல் நெறிய தாலே
ஒப்பற்ற மாணாக்கர் பலரைத் தந்தாய்
கரவறியா உன்தமிழின் தகுதி கண்டு
கலாநிதியாய் உலகுன்னைப் போற்றிற் றம்மா!

முல்லைநில வன்னிநகர் முகிழ்த்து நின்ற
மூதறிஞ! உன் அகவை நூறதாக!
எல்லையிலா உன்அறிவு ஏற்றங் கண்டு
இனிப்பலவாம் விருதுகளும் உன்ன தாக!
தொல்லைதரு பகைவரெலாம் தூரச் சென்று
துவண்டுவிட உன்வெற்றி தூய தாக!
நல்லை!என உனைப்பலரும் வாழ்த்தி நிற்க
நானிலத்தில் எந்நாளும் வாழ்க என்பேன்.

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**
கம்பன் கழகம்

ISBN : 978-955-7654-13-3
9 789557 654133

விலை : 200/-